JL
Y73(P31)
N26
181232

1476

தமிழர் நாகரிகம்.

சஞ்சிகை 3.] [மார்ச்சு 1926.

26 MA

# நமது பரதகண்டம்

(இரண்டாவது பாகம்)

## அன்னிய நாட்டுக் கிரஹணம்.

பக்கங்கள்.

அத் : 3. சரு. 6.

தமிழகத்தின் நாகரிகம். 85—136

அத் : 4. போர்த்துகீஸர்.

சரு. 1. நவீன மார்க்கக் கிளர்ச்சிகள் .... 137—144

கிரந்தகர்த்தா :

சரித்திராசிரியர் வை. சூரியநாராயண சாஸ்திரி, எம். ஏ., எல். டி.

[illegible]ஞ்செய்தவர் :—

வை. வெ. சகோதரர்கள்,
தபாற்பெட்டி 408,
திருவல்லிக்கேணி, சென்னை.

[illegible]hts Reserved.

வருஷசந்தா 3—[illegible]—0

வரை தனத்தை வீசி எறிந்து விட்டால் அவ்வலையில் எல்லாம் சிக்கிக்கொள்ளும் என்றும் குற்றவாளிகள் தைரியங் கொண்டிருக்கின்றனர். ஆனால் முற்காலங்களிலோ ஞாயம் பெறுவதற்குச் செலவுகள் கிடையா. மீண்டும் இக்காலத்தில் குற்றவாளிகள் தண்டனையடைந்தால் சிறைச்சாலை மாமியார் வீடென்கின்றனர், அல்லது அரசனின் விருந்தாளி எனக் கருதிகின்றனர். ஏனெனின் சிறைவாசம் என்பது தற் காலத்தில் சுக ஜீவனந்தான். இவ்விஷயமாய் நம் முழு அபிப்பிராயத்தை வேறொரு சந்தர்ப்பத்தில் கூறுவாம்.

முற்காலத்திய தண்டனைகள் குற்றத்தையும் மிஞ்சி மிகக் கொடுமையாயிருந்தன என்றும் அநாகரிகங்களாயும் இருந்தன என்றும் கூறுவதுண்டு. ஏனெனின் திருடர்கள் கொலைசெய்யப்பட்டனர். அல்லது மாறு கை மாறு கால் வாங்கப்பட்டனர். அதனால்தான் திருட்டுக்கள் அதிகம் காணப்படவில்லைபோலும்.

ராஜதுரோகிகள் யானைக்காலினால் இடறுண்டனர். இதரநாட்டு ரகசிய சாரணர்கள் சிரச்சேதம் செய்யப் பட்டனர். இவைகள் அரசுமுறையில் எக்காலத்திலும் காணப்படுகின்றன.

தெய்வத்தைநம்பி அக்கினி, கொதிக்கும் எண்ணெய், முதலியவற்றின் சம்பந்தமாகச் செய்யப்படும் சத்தியங்களை நம்பிய காலமானதால் முற்காலத்திய நியாயம் மூடத் தன்மையானதென்றும் கூறுவதுண்டு. இவைகளை நாம் ஒப்புக்கொள்வோம். ஆனால் தெய்வத்தை நம்பினவர் களுக்கு இறைவன் அருள் செய்வான் என்பதை நியாயஸ் தலத்தினர் ஒத்துக்கொள்ளாததனால்தான் இன்றைக்கு தெய்வத்தை நம்பிச்செய்யும் சத்தியத்திற்குப் பயனில்

மேலும் தெய்வத்தின் சக்தியினால் உலகம்
நடைபெறுகின்றதெனின் குற்றவாளியில்லாவதனைக் குற்ற
வாளியாய் ஆக்கிவிட்ட சமயத்தில் கடவுள் ஏன் அவனுக்குச்
சகாயஞ் செய்யமாட்டார்? அந்நியாயத்தீர்ப்புகள் செய்த
வர்களும் கடவுளால் தண்டிக்கப்பட்டனர் என்கிற நம்பிக்கை
யிருந்த காலத்தில் நியாயாதிபதிகளும் பயபக்தியுடன்
விசாரணை செய்தனர். தமிழ்நாட்டில் அரசனே பெரும்
பாலும் நியாயாதிபதியாயிருந்தான். அரசன் தெய்வத்தின்
அம்சம் படைத்தவன். சில அரசர்கள் தங்களுக்கு உண்மை
விளங்காத காலத்தில் இரவும் பகலும் கடவுளைப்
பிரார்த்தனை செய்து வரப்பிரசாதம் பெற்றிருந்தனர்
என்பதற்கு ஐயமில்லை.

இவைகளைப்படிக்கின்ற மேனாட்டு மனப்பாங்கையுடைய
மேதாவிகள் நம்மைக்கண்டு நகைக்கலாம். ஆனால் மானிடர்
களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சட்டத்தை முற்றிலும்
பரீக்ஷைகள் செய்து அவைகளின் குறைகளைக் கண்டவர்
களுக்கு நம்கருத்து அவ்வளவு மூடபக்தியுடைத்தெனப்
புலப்படாது. மேலும் பாரதமக்களுக்குத் தெய்வீகத்
தீர்ப்பில் நம்பிக்கையதிகம். ஆதலால் வியவகாரம் செய்
கின்றவர்களின் அபிப்பிராயத்துக்கிணங்க தற்காலத்திலும்
சில சமயங்களில் கற்பூரத்தையவிக்கும். ஸத்தியம் நியாய
ஸ்தலங்களில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இப்பொழுது நாம் கூறுவது யாதெனின் நியாயத்தைக்
கண்டுபிடிக்கப்படும் முறைகளுள் தெய்வ சக்திக்கும் இட
மிருக்கவேண்டும் என்பதே. தெய்வத்தை நம்பி நட
வடிக்கை நடத்த வேண்டும். சட்டங்களில் ஏற்பட்டிருக்கும்
றைகளைக் கொண்டு தப்பித்துக் கொள்ளலாம் என்கிற



ஓட்டைகள் அடைக்கப்படவேண்டும். "Legal Tech-
nicalities". என்பதை முக்கியமாய் அனுசரிக்கக் கூடாது.
அதாவது சட்டபரிபாஷைகளின் வார்த்தைகளை எழுத்
தெழுத்தாய்க் கணக்கிட்டுப் படித்துக்கொண்டு ஒரு எழுத்து
சற்று கோணலாய் அச்சிடப் பட்டிருப்பின் சட்டமே
தவறென்று கூறும் வக்கீல்களின் பேதமையை ஒழித்துவிட
வேண்டும் என்பதுதான் நம் முக்கிய நோக்கம். முற்காலத்
திலும் சட்டங்கள் இருந்தன என்பதை ஸ்மிருதிகளால்
கண்டு கொள்வோமாக. ஆனால் காலதேசபாத்திரம் ஆகிய
சந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறு புண்ணிய பாவத்திற்கிட
மிருந்தது என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுகிறோம்.

நிற்க; ஆதிகாலத்தில் பாரத வர்ஷத்தில் ஜாதி வித்தி
யாசங்களுக்குத் தக்கபடி தண்டனைகள் மாறிநின்றன என்கிற
குறையுமுண்டு.* ஆம், ஆனால் அது இடையில் வந்ததென்ப
தற்கையமென்னை? இந்நாட்டில் இப்பொழுது காணப்படும்
பழைய சட்டங்கள் காலத்திற்குத்தக்கவாறும் தேசத்
துக்குத்தக்கவாறும் மாறிக் கொண்டு வந்தவை என்பதை
அவைகளினால் தெரிந்து கொள்ளலாம். அவைகள் காலத்
திற்குத் தக்கபடி சீர்திருத்தங்கள் பெற்றிருந்தன. இந்
நாட்டின் இடம் பொருள் ஏவல் மாறிக்கொண்டு வந்தகாலத்
தில் நமது முன்னோர்களும் சீர்திருத்தம் செய்துகொண்
டிருந்தனர் என்பதை யாம் ஒருகாலும் மறுக்கமாட்டோம்.
மேனாட்டார்களின் சம்பந்த மில்லாத காலத்தில் அவர்

* இவ்விஷயமாய் இக்காலத்தில் நாகரிகத்தில் சிறந்தவர் எனப்
படும் ஆங்கிலர் ஆட்சியில் வெள்ளையர்க்குச் சில விசேஷ விதிகள்
இருக்கின்றன என்பதை யாம் வற்புறுத்திக் காட்டுகின்றோம். உலக
முற்றிலும் ஜாதி வித்தியாசமும் இன வித்தியாசமும் வர்ண வித்தி
யாசமும் இன்றைக்கும் இருக்கின்றன என்பதை யறியாதாரிலர்.

களுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே நம் நாட்டில் நடைபெற்றிருந்த ஸ்மிருதிகளைப் படித்தவர்களுக்கு யாம் அதிகம் கூறுவது அனாவசியமாய்த் தோன்றும். அவைகளைப் படிக்காதவர்களுக்கு யாம் கூறுவது தற்புகழ்ச்சி பெற்ற பழைய கதை என்று தோன்றும். ஆதலால் நமது நாட்டிலுள்ளவர்கள் அதிக சிரத்தையுடன் பழைய நூலாராய்ச்சி செய்யவேண்டும்.

ஆதிகாலத்தில் தென்னாட்டில் நடைபெற்ற சில நியாய சபைத் தீர்மானங்கள், பழைய சாசனங்களினால் நன்கு காப்பாற்றப் பட்டிருக்கின்றன. அவைகளுள் சில ஆங்கில நாட்டில் வெற்றிபெற்ற **முதல் வில்லியம்** என்கிற நார்மன் பிரஞ்சு அரசாட்சிக்குச் சம காலத்தில் நடைபெற்றன என்றும் வேறு சில, **நியாய சிம்ஹம்** என்கிற பெயர்பெற்ற ஹென்றிக்குச் சம காலத்தில் நடைபெற்றன என்றும் சரித்திராசிரியர்கள் கூறா நிற்பர்.

ஜம்பை என்கிற ஊரின் வியாபாரி ஒருவன் ஒரு தாசியினிடம் உறவாடிக்கொண்டிருக்கையில் நாவலூரான் ஒருவன் அவளையே நாடியதனால் முதலில் கூறப்பட்ட வியாபாரியினால் அந்த நாவலூரான் கொல்லப்பட்டான். விசாரணைக்குப் பின் குற்றவாளி ஜம்பை கோவிலில் ஒரு தங்க விளக்கு வைத்து எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்க வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும் என்று தீர்மானஞ் செய்யப்பட்டது. இது 1012-13ல் நடந்திருக்கவேண்டும். அதே காலத்தில் மேனாடுகளிலும் இம்மாதிரியான முறைகள் இருந்தன. உதாரணமாய் மாதாகோவில்களில் மெழுகுவத்தி ஏற்றி வைக்கத் தீர்மானங்களிருந்திருக்கின்றன.

சுமார் கி. பி. 1054-ல் ஒரு கிராமாதிகாரி வரி விதிக்கப்படும் நிலைமையிலில்லாத ஒரு ஸ்திரீயை வரி கொடுக்கு



மாறு வற்புறுத்தினான். அவளுக்கு வரி கொடுக்கும் சக்தியின்மையை விளக்குமாறு விஷத்தையுண்டு சத்தியஞ் செய்யவேண்டும் என்று தீர்மானஞ் செய்தான். அவள் சம்மதித்து அவ்வாறே செய்தாள். அதனால் இறந்தனள். அதையறிந்த மஹா ஜனங்கள் கிராமாதிபதியினுடைய நடவடிக்கை அக்கிரமம் என்று எண்ணிச் சுமார் பதினெட்டு ஜில்லாக்களிலுள்ளவர்கள் கூடி அவன்மீது குற்றஞ்சாட்டி விசாரணை செய்து அவனைத் தண்டித்தனர். இதனால் மகா ஜனங்களுக்கு இருந்த அதிகாரம் இன்னதென்பதும், தெய்வத்தினிடம் அதிகாரிகள் முற்றிலும் நம்பிக்கை வைத்துவிடக்கூடாது என்பதும், அந்த ஸ்திரீ அவனால் வற்புறுத்தப்பட்டனள் என்பது தெரிந்ததனால் வரி வசூல் செய்த அதிகாரி பொது ஜனங்களால் தண்டிக்கப்பட்டனன் என்பதும் பெற்றாம். இங்கிலாந்தில் இரண்டாவது ரிச்சார்டு அரசுபுரிந்த காலத்தில் புதிதாய் விதிக்கப்பட்ட வரி வசூல் செய்யச் சென்றவன் வாட் டைலர் என்பானின் மகளை அவமானப்படுத்தினான் என்று (1381-ல்) செய்த கலகத்தைப்போல் தமிழ் மக்கள் செய்யவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுமார் அதே நூற்றாண்டில் ஒரு சூத்திரன் வேட்டையாடியகாலத்தில் குறி தப்பி ஒரு வேளாளனைக் கொன்றுவிட்டனன். எழுபத்தொன்பது ஜில்லாக்களில் வசித்த வேளாண்மைத் தொழில் புரிந்தவர்கள் ஒன்றுகூடிய சபையில் அவன் குற்றஞ் சாட்டப்பட்டனன். அறுபத்தினாலு பசுக்களைக் கோவிலுக்குத் தானஞ் செய்யக் கட்டளையிடப்பட்டனன். குறிதவறிக் கொலை செய்ததற்காக அவன் தலையைக் கத்தியால் வீசிவிடவில்லை. அல்லது விடுதலையும் செய்துவிடப் படவில்லை.

பன்னிரண்டாவது நூற்றாண்டில் ஒருவன் **தன்மனைவி**யைத் தள்ளினான். அவள் கீழே விழுந்து இறந்து விட்டனள். அவன் கிராமச்சபையில் குற்றஞ் சாட்டப்பட்டுத் தண்டிக்கப்பட்டனன். "என்மனைவியை நான் கொன்றேன், என்னை யார் கேட்பது?" என்று அவன் நினைக்கவில்லை. தனக்கு விதிக்கப்பட்ட அபராதத்தைச் செலுத்தினான்.

ஒரு வேளாளனும் வேறொருவனும் வேடிக்கையாய்த் தமது சாமார்த்தியத்தை விளக்குவதற்காக ஆயுதச் சண்டை செய்தனர். வேளாளனுக்கு உறவினனான வேறொருவனும் தன் சாமர்த்தியத்தைக் காட்ட விரும்பி வேடிக்கைப் போர்செய்ய இரண்டாவது மனிதன் கொல்லப்பட்டனன். இறந்தவன் பந்துக்களுள்பட பல ஜாதியார்கள் சபைகூடிக் குற்றவாளியைத் தண்டிக்கலாயினர். இதனால் வேடிக்கைகளிலும் உயிர்ச்சேதம் செய்யக்கூடாதென்று ஏற்படுகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் பத்தொன்பதாவது நூற்றாண்டுவரை மேனாடுகளில் நடந்துவந்த துவந்துவயுத்தத்தைக் (**Duels**) குறிப்பிடத்துணிகின்றோம். அதாவது இரண்டு மனிதர்களுக்கு ஏதாவது மனஸ்தாபம் ஏற்பட்டால் தாங்களே நேரிலாகிலும் அல்லது தங்களுடைய பிரதிநிதிகள் மூலமாகவாயினும் அவர்கள் சண்டையிட்டுக் கொள்வது வழக்கம் அதனால் விளைந்த தீங்குகள் கொலைகளாயினும் அந்த யுத்தம் சட்ட விரோதமல்ல என்று கருதப்பட்டது. நமது கண்டத்தில் மேனாட்டார்கள் வியாபாரஞ் செய்யத் தொடங்கின காலத்தில் அம்முறையைத் தங்களுடன் சுமந்து வந்தனர். முதல் கவர்னர் ஜெனரல் எனப்படும் உவாரன் ஹேஸ்டிங்க்ஸ் என்பவரும் அவருடைய ஆலோசனை சபையிலிருந்த அங்கத்தினரான



பிரான்ஸிஸ் என்பவரும் "டியூயல்ஸ்" என்கிற அந்தச் சண்டை முறையைக் கல்கத்தாவில் அனுஷ்டித்தனர்.

ஒரு ஸ்திரீ தன்மகளின் பேரில் ஒரு கோலை எறிந்தனள். அக்கோல் வேறொரு சிறுபெண்ணைத் தாக்கியது. காயம்பட்டவள் இருபதாம் நாள் இறந்தனள். ஆதலால் அந்தஸ்திரீ குற்றஞ் சாட்டப்பட்டனள். அதற்காக அவள் புருஷன் முப்பது பசுக்களைக் கோவிலுக்கு தானஞ் செய்யத் தீர்மானமாயிற்று.

மேற்குறிப்பிடப் பட்டவைகளால் பலவித குற்றங்களும் கிராம மகா ஜனங்களால் கவனிக்கப் பட்டன என்பதும், கோவில்களுக்கு அபராதம் செலுத்தப்பட்டன என்பதும், இந்தமாதிரியான அபராததனம் அரசாங்கத்தைச் சேரவில்லை என்பதும் தெரிகின்றன. கோவில்களுக்கு அபராதஞ் செலுத்தப்பட்டதன் காரணம் யாதெனின் ஒருகால் தீர்மானங்கள் மானிடர் புத்திக் குறைவினால் ஏற்பட்டவைகளாயின் தெய்வ வசத்தில் விட்டு விடப்படின் முடிவான நியாயம் ஏற்படும் என்பது பாரத மக்களின் நம்பிக்கையாகும். இதேமாதிரி அனேக உதாரணங்களைக்கொண்ட சாசனங்களைக் கூறலாம்.

நிற்க; பிராம்மணன் குற்றஞ் செய்தால் அவனுக்குத் தண்டனைகளே யில்லை, அல்லது தண்டனை மிக சுவல்பம் என்று பெரிய கூப்பாடு ஒன்றுண்டு. அது அக்காலத்திய சந்தர்ப்பத்தைப்பற்றிய உலகமுறையாகும். உதாரணமாய் ஆங்கில நாட்டில் பதினான்காவது நூற்றாண்டு வரை குற்றஞ் செய்தபாதிரிகள் மத சம்பந்தமான விசாரணைக் குட்பட்டே தண்டனைகள் சுவல்பமாய் அடைந்து கொண்டிருந்தனர். மேலும் பைபிளிலிருந்து சில வாக்கியங்களைப் படிக்கத்

தெரிந்து கொண்ட குற்றவாளிகள் அனேகமாய் மன்னிக்கப்பட்டனர். ஆதலால் படித்தவர்கள் குற்றஞ்செய்திடின் அவர்களுக்கு சுவல்ப தண்டனையும் அதிக அவமானத்தைத் தரும் என்று நினைத்தனர் போலும் பண்டைக் காலத்திய அறிவாளிகள்.

தமிழரசர்களின் ஆட்சி முறை வல்லரசன்று. சிலப்பதிகாரத்தில் காணப்படும் ஐம்பெருங் குழுவின்விவரம்* அடியார்க்கு நல்லாருரையில் காணப்படுவதாயினும் அல்லது வேறுயாதாயினும் ஜனங்களின் உதவியைக்கொண்டே அரசன் ராஜ்யம் செய்தான். மேலும் எண்பேராயம் என்கிற ஒரு சபையுமிருந்தது†

தென்னாட்டில் காணப்படும் சில சாஸனங்களினின்றும் ஆதிகாலத்தில் அதிகார வர்க்கத்தினரின் தொழிலைப் பற்றிச் சில விஷயங்கள் முக்கியமாய் வெளிப்படுத்தவேண்டியவை இனி வருமாறு:

அரசனுக்கு முதலுதவி மந்திரிக்குழாம் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். உடன்கூட்டம் என்பது மன்னனுடன் கூடவே நிற்கும் உதவியாளர்கள் என்பது பொருளாகும். பள்ளிச்சிவிகையார் அஃதாவது பல்லக்குச் சுமக்கும் போயிகள், திருமுன்கோட்டி அஃதவது அரசனுக்குக் முன் சென்றுகொண்டிருக்கும் தாரை ஊதித் தப்பட்டம் கொட்டுவோர், போர்வீரர்கள், தலை எடுப்பார் அஃதாவது

* "அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தவாத் தொழிற்றூதுவர், சாரணர் என்றிவர் பார்த்திபர்க் கைம்பெருங் குழு வெனப்படும்."

† மாசனம், பார்ப்பார், மருத்தர், நிமித்தர், அமைச்சர், கரணத்தியலவா, கரும விதிகள் கனகச்சுற்றங் கடை காப்பாளர், நகரமாந்தர், நளிபடைத்தலைவர் யானை வீரரிவுளி மறவ, ரினையரெண்பேராயமென்ப.



அரசக் கொடி, தங்கத் தடி முதலிய ராஜ பிருதுகளைக் கொண்டுபோகப்பட்டவர், கட்டியக்காரர்கள் அஃதாவது கத்திகளைக் கையில் பிடித்து ராஜ சன்னிதானத்தைக் காப்பாற்றுவோர் ஆகியவர்களும் அரசனைச் சார்ந்த உத்தியோகஸ்தர்கள் ஆவர்.

அரசன் ஸ்நானஞ் செய்து கொண்டிருப்பினும் பூஜை செய்து கொண்டிருப்பினும் போஜனஞ் செய்து கொண்டிருப்பினும் தாம்பூலம் போட்டுக் கொண்டிருப்பினும் எக்காலத்திலும் அவனது கட்டளையை உடனுக்குடன் எழுதி வைக்கவேண்டிய கடமையைக் கொண்டவர்களுக்கு திருவாய்க்கேள்வி என்று பெயர். நகரபரிசோதனை காலங்களில் செய்யவேண்டிய சீர்திருத்தங்களை அரசன் கட்டளையிட்டவுடன் தக்ஷணமே ஓலையில் எழுதிவிடவேண்டியது அவர்களுடைய வேலையாகும்.

கோவில்களையும், கலாசாலைகளையும், கட்டிடங்களையும் பற்றிய சீர்திருத்த உத்தரவுகள் ஆங்காங்கு உடனுக்குடன் குறிப்பிடப்பட்டு யார் யார் எதைப் புரியவேண்டும் என்பது திருமந்திர வோலையால் வெளியாக்கப்பட்டது. இத்திருமந்திர ஓலையென்பது அரசனும் அரசனது சபையோராலும் தீர்மானஞ் செய்யப்பட்ட (காபினட் Cabinet) உத்தரவுகளாம். திருமந்திர ஓலை என்பதன் பொருளைப் பாருங்கள். திரு என்பது ஸ்ரீ என்பதாகும். அது ஆன்றோர்களுக்குரிய மரியாதை மொழியாகும். மந்திரம் என்பது ஆலோசனை சபையாகும். ஓலை என்பது பனை ஓலையாகும். இதனால் அரசன் நின்றபடி கட்டளையிட்டது அவன் இஷ்டப்படி செய்யப்பட்டதாய்க் கருதுவதற்கு இடந் தராது. "ஒருகால் இக்காலத்தில் சில இடங்களில் நடப்பதைப்

போல் பேருக்கு இவ்வொழுங்குகளெல்லாம் எழுத்திலிருக்கலாம். உண்மை வேறாயிருக்கலாம்'' என்று யாவரேனும் குறைகூற இடமுண்டு. அது உண்மையாயினும் நாகரிகம் பெற்ற இக்காலத்தில்தான் மந்திராலோசனை முறைகளிருக்கின்றன என்றும் முற்காலத்தில் கண்மூடித்தனமாயிருந்தனர் என்றும் கூறுவோருக்கு இது ஒரு வாய்ப்பூட்டாகும்.

ராஜ்யத்தின் வருவாய்களைக் கணக்கு வைத்துக் கொண்டிருந்த இலாகாவில் வேலை செய்தவர்களுள் **கங்காணி** என்பவன் கணக்கு வைப்பவன். **நாயகம்** என்பவன் கணக்குத் தணிக்கை செய்பவன். அதன் பெயரேடு வைப்பவனுக்கு **முகவெட்டி** என்று பெயர். **வரிப்புத்தகம்** தயாரித்து வைத்துக் கொள்ளுவதற்கு ஒரு அதிகாரியுமிருந்தனன். அதற்கு அட்டவணை ஒன்று மிருந்தது. அதற்கு **வரி ஏடு** என்று பெயர். அதைத் தயாரிக்க ஒரு அதிகாரி இருந்தனன். **பட்டோலை** என்பது ராஜாங்க உத்தரவுகளுக்கு அசல் என்று கூறப்படலாம். இவைகளுக்குப் பெரியதோர் சான்று ராஜேந்திரசோழனின் சாஸனம் ஒன்றாகும்.

கோலாரிலுள்ள ஒரு பிடாரியார் கோவிலுக்கு அம்மன்னனால் அளிக்கப்பட்ட சாஸனத்தினின்றும் பல விஷயங்களை நாம் தெரிந்து கொள்ளலாம். மேற் குறிப்பிட்ட விஷயம் அரசனால் வெளியிடப்பட்டவுடன் திருமந்திர ஓலைக்காரர்களுக்கு அனுப்பப்பட்டது. அவர்கள் அதிகார முறையில் வரிசைக்கிரமமாக வரிக்கணக்கு முதலிய புஸ்தகங்களில் அதைப் பதிவு செய்து அதனால் வரக்கூடிய வருமானங்களைத் தீர்மானஞ் செய்து அதை மத்தியஸ்தர்கள் முன்னிலையில் தீர்மானஞ் செய்வதற்குள் ஆறு வருஷங்கள்



ஆய்விட்டன. ஆயினும் அரசனால் தானஞ் செய்வதாய் வாக்குத்தத்தம் செய்த நிமிஷம் முதல் கோவிலுக்குச் சேரவேண்டிய வரும்படி கொடுக்கப் பட்டுவிட்டது. அதில் கையெழுத்து செய்திருக்கும் அதிகாரிகள் ஸர்வக்கிரதுயாஜி, ஸோமயாஜி, பட்டர் என்கின்றவர்கள் கற்றறிந்தவர்கள் என்றும் வைதிக வம்சத்தில் பிறந்தவர்கள் என்றும் அவர்களும் நன்னட வடிக்கையுள்ளவர்களென்றும் நமக்குத் தெரிகின்றது.

மேற் குறிப்பிட்டிருக்கும் சாஸனத்தினால் அக்காலத்தில் வழங்கிவரப்பட்ட அளவைகளும் இடைகளும் வெளியாகின்றன. பிரக்கம்பள்ளி என்ற கிராமத்தின் வரும்படிகளான 176 கலம் ஆறு குறுணி நான்கு நாழி மூன்று ஆழாக்கு நெல்லும், 132 களஞ்சு மூன்று மஞ்சாடி ஆறுமா ஒரு காணி தங்கமும் கொடுக்கப் பட்டதாம். இம்மாதிரி வேறு சில சாஸனங்களில் வேறுவகையான அளவைகளும் காணப்படுகின்றன. அவைகளைக் கொண்டும் தமிழ்வாய்ப்பாடுகளைக் கொண்டும்

ஐந்து செவுடுகள்.... (சோடுகள்) } ஒரு ஆழாக்கு

இரண்டு ஆழாக்குகள் .... ஒரு உழக்கு

இரண்டு உழக்குகள் .... ஒரு உரி

இரண்டு உரிகள் .... ஒரு நாழி

எட்டு நாழிகள் .... ஒரு குறுணி

இரண்டு குறுணிகள் .... ஒரு பதக்கு

இரண்டு பதக்குகள் .... ஒரு தூணி

பன்னிரண்டு குறுணிகள் (அல்லது மூன்று தூணிகள்) } ....ஒரு கலம்

என்று தெரிந்துகொள்கின்றோம்.

இச்சந்தர்ப்பத்தில் நாம் இன்னுமொன்று அறிந்துகொள்ளக்கடவோமாக. அஃதாவது அக்காலத்திய அளவுகளுக்குள்ள பெயர்களுள் சில காரணப் பெயர்களாகும். மரக்கால் என்பது மரத்தினால் ஆக்கப்பட்டது. இந்த அளவும் ஒவ்வொரு மண்டலத்தில் ஒவ்வொரு பெயரை உடைத்து. அப்பெயர்கொண்ட அளவே அந்தந்த நாட்டில் பிரதானமாயிருந்தது. ஆகவள்ளான் என்பது ஒரு அரசன் பெயரைக் குறிக்கின்றது. திருமறைக்காடன் (வேதாரணியம்) என்பது வேதாரண்ணியத்தில் உபயோகப்படுத்தப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் சாஸனத்தில் கண்ட தங்க நிறை வெள்ளி தாம்பிரம் முதலிய உலோகங்களுக்கும் பொதுவானது.

| | |
|---|---|
| இரண்டு குன்றிமணிகள் .... | ஒரு மஞ்சாடி |
| இருபது மஞ்சாடிகள் .... | ஒரு கழஞ்சு |
| மஞ்சாடியில் பத்தில் ஒரு பாகம் .... | ஒருமா |
| மஞ்சாடியில் நாற்பதில் ஒரு பாகம்.... | ஒரு காணி |

அக்காலத்திலும் தங்கத்தைப் பரீட்சை செய்வதற்கு உரைகல் இருந்தது என்பதற்கையமில்லை. இடை போடுவதற்குத் தராசுகளுமிருந்தன.

மேலும் முற்காலத்திய கூலியையும் விலை வாசிகளையும் காட்டக்கூடிய சில சாஸனங்களுமிருக்கின்றன. ஆதிகாலம் முதல் தங்க நாணயங்கள் வழங்கி வந்தன என்பதற்குப் புறநானூறு முதலிய நூல்கள் சாக்ஷிகளாகும். "காணம்" என்கிற நாணயமும் ஒரு சான்றாகும். உள்நாட்டு நாணயங்கள் தவிர ரோமன் நாணயங்கள் காணப்பட்டன என்பதை முன் ஒருமுறை கூறியுள்ளோம். "காசு" என்பது பொற்காசுதான் என்று தற்காலத்திலும் வியவகாரத்திலிருக்கின்றது. அக்காலத்தில் நாணயங்களிருந்தபோதிலும் மாற்றுப்பொருள்களால்தான் உள்நாட்டில் அதிக வியாபாரம் நடைபெற்றது. வெளிநாட்டார்களுக்கு வேண்டிய மிளகு, சுக்கு, ஏலக்காய், கிராம்பு, லவங்கப்பட்டை முதலிய திரவியங்களுக்குப் பதிலாய் மேனாட்டு நாணயங்கள் இந்நாட்டில் குவியலாயின. இந்நாட்டிலுள்ள பட்டு, தங்க நகைகள், முத்து மாலைகள் ஆகிய வஸ்துக்கள் கீர்த்திபெற்றவையானதால் அவைகள் மேனாடுகளில் ஒன்றுக்கு நூறாய் விலை ஏற்றி விற்கப்பட்டன. இந்நாட்டில் வெகு காலமாய் வழங்கிவரப்படும் ஆபரணங்களின் ஜாபிதாக்கள் வட மொழியிலும் தென் மொழியிலும் காணப்படுகின்றன. அவைகளை இந்நூல் இறுதியில் கணக்கிட்டுக் காட்டுவோம்.



இவ்விஷயங்களைக் குறித்து நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது தொன்றுண்டு. அஃதாவது நகைப் பைத்தியம் கீழ்நாட்டார்களுக்கு அதிகம் என்று மேனாட்டார் கூறுவதே. இவ்விஷயமாய் ஏற்கனவே கூறப்பட்டிருக்கும் மானிடர் முன்னேற்றத்தில் 59-60வது பக்கங்களில் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கவும்.

நிற்க; நவரத்னங்களும் நிதிகளும் பொருந்தியது இந்நாடு என்பதை யறியாதார் யாவர்?

தமிழரசர்களின் சைன்னிய முறை நமதுபாரதகண்டத்துக்குரிய ரத கஜ துரக பதாதிகளைக் கொண்டதே. முற்காலத்திய தமிழர்கள் யுத்தவீரர்கள். அவர்கள் யுத்தத்தில் அடைந்த வடுக்கள்தாம் மதிப்பற்ற அவர்களுக்கு அலங்காரங்களெனக் கருதப்பட்டன. யுத்தத்தில் அடிபட்டு வீழ்ந்தவன் முன்புறம் காயம் பெற்றானா பின்புறம் காயம் பெற்றானா என்றே கேட்பது அக்காலத்திய வழக்கம்.

பின்புறம் காயமடைந்தவனைப் பெற்றதாயும் விரும்பாள்: பெண்டிரும் விரும்பாள். முன்வைத்தகாலைப்பின் வாங்காதவன் வீரன் எனப்புகழப் பெற்றனன். அமர்க்களத்தில் அபஜயம் அடைந்தவன் தன் ஆயுதத்தாலே தன் ஆயுளை அழித்துக் கொண்டானேயன்றி மீண்டும் நாட்டில் தலை காட்டத்துணிந்தானில்லை. செருக்களத் தினின்று ஓடினவன் பேடியெனப் பெயரிட் டழைக்கப் பட்டவனைச் சமூக வாழ்க்கையில் இடம் பெற்றானில்லை.

விளையாட்டுக் களிலும் போர்வீரத்தனத்தையே பயின்றனர் அக்காலத்திய தமிழர். வில் முதலிய ஆயுதங்களை வெகுசாமர்த்தியமா யுபயோகப்படுத்தினார்கள். மேலும் தற்காப்பு ஆயுதங்கள் பல இருந்தன என்பதற் கையமில்லை.

யுத்த முறைகள் தர்மத்தையே பின்பற்றியவைக ளென்பது புறநானூறு முதலிய பல நூல்களினின்றும் நாம் தெரிந்து கொள்கின்றோம். ஆடுமாடுகள், ஸ்திரீகள், குழந்தைகள், வயோதிகர்கள், வியாதிஸ்தர்கள், பிராமணர்கள், ஆகியவர்களுக்கு யுத்தத்தினால் தீமைகள் விளையாதிருக்குமாறு பறையறைவது முதற்கடமையென்றிருந்தனர் போர்புரிந்தமன்னர்கள்.

தமிழரசர்கள் காலத்தில் ஏற்பட்டிருந்த வரிகளை இனிக் கவனிப்போமாக. நிலத்தீர்வை தான் ஒரு அரசாங்கத்துக்கு முதன்மையான வரியாகும். அக்காலத்திய தீர்வைகள் மேல்வாரமென்றும் கீழ்வாரமென்றும் குடிவாரமென்றும் பாகுபாடுகள் செய்யப்பட்டிருந்தன. இவ்வாரங்கள் அல்லது காணிக்கடன் ஒரு அளவுற்ற பூமியில் விளையும் தானியத்திற்குத் தக்கபடி நிர்ணயிக்கப்பட்ட குத்தகையாகும்.



விளைந்த நிலத்துக்குத்தான் வரியேயன்றி விளையாத நிலத்துக்கும் விளையாத காலத்துக்கும் தீர்வை கிடையாது. ஆனால் ஒருகால் விளையக்கூடிய பூமி பயிர் செய்யப்படாமலிருப்பின் தீர்வை தள்ளிக் கொடுக்கப்படவில்லை. அத்தகைய பூமி அரசனால் தக்க காரணத்தை முன்னிட்டு வேறு பயிர் செய்பவர்களுக்குக் கொடுத்து விடப்பட்டது. மேலும் நிலத்தீர்வை வசூல் செய்யப்பட வேண்டிய முறை, அளவு, காலம், நிலத்தின் தரம், நிலப்பாகு பாடு (நஞ்சை, புன்செய், தோப்பு, துரவு முதலியன) ஜல ஆதாரம், ஜல சௌகரியம், மழை முதலிய அனேக அம்சங்கள் விதிக்கப்பட்டிருந்தன. இத்தீர்வைகளை வசூல் செய்தவர்களுக்குக் காணியாளர் என்ற பெயரிடப் பட்டிருந்தது. இக்காணியாளர்கள் கிராமக் களஞ்சியத்தில் கூட்டிவைத்த நெல்லைக் காப்பாற்றி அரசனுக்குக் கடமையைச் செலுத்தி வந்தனர். பர்வத்திற் கேற்ப பயிர் செய்யாத குடிகளைப்பற்றி யரசனுக்குத் தெரிவிக்க வேண்டியது காணியாளர் கடமை. ஆயினும் இக்காணியாளர் கிராம சபைகளின் மூலமாய்த் தெரிவித்தே பூமிகளை மாற்றவேண்டி யிருந்தது. இதனால் அரசனை வஞ்சித்த குடிகள் மிகக் குறைந்தவர்களே.

அதனால் குடிகளுக்குத் தங்கள் நிலத்தை போக்கியம், ஈடு, கிரயம் முதலியவைகள் செய்யப் பாத்தியமில்லை என்று நாம் நினைக்கக்கூடாது. அரசனுக்கு இருந்த ஸர்வ சுவதந்தரத்தைக் காட்டக்கூடியது முற்காலத்திய முறை. முற்காலத்திய சாஸனங்களினால் பத்திரங்களும் அரசாங்கத்தாரால் (ரிஜிஸ்டர்) பதிவு செய்யப்பட்டன என்று தெரிபவருகின்றது. ஆனால் ரகசியமாய் இக்காலத்தில் ரிஜிஸ்டர் செய்யப்படுவதைப்போல் அக்காலத்தில் நடைபெறக்காரணமில்லை. ஏனெனின் சப் ரிஜிஸ்டரார் ஆபீஸ்

(Sub Registrar's Office) என்பது ஒரு மூலையிலிருக்க ஐம்பது மைலுக்கப்பாலிருக்கும் ஒரு குடியானவனும் கிராம அதிகாரிகளும் அல்லது கூலி எழுத்துக்காரர்களும் ஒன்று கூடி இரண்டு சாக்ஷிகளுடன் தம்முடையதல்லாத இதரர்களின் நிலத்தை வஞ்சகமாய் யாரோ ஒரு வழிப்போக்கனுக்குப் பராதீனஞ்செய்துவிட்டால் அது பதிவுபெற்று விடுகின்றது. அதனால் விளையுந்தீங்கு இன்னதென்று சொல்ல வேண்டுவதில்லை. இக்காலத்திய கோர்ட்டு வியாஜ்யங்களுக்கெல்லாம் ஆதாரம் இப்பத்திரப்பதிவு முறையேயாகும். ஆதிகாலத்திலோ விற்கிறவன் வாங்குகிறவன் சாக்ஷி எல்லோரும் கிராம சமுதாய சபைகளில் அதிகாரிகள் முன்னிலையில் ஏற்பாடு செய்யவேண்டியிருந்தமையால் கிருத்திரமத்திற்கும் போக்கிரித் தனத்திற்கும் இடமில்லை. ஒருகால் "அக்காலத்தில் ஜனக்குறைவு ஏற்பட்டிருந்ததால் காரியங்கள் சுலபமாய் நடந்தன" என்ற பழைய பாடம் யாவரேனும் படிக்கலாம். யாம் கூறுவது யாதெனின் அயோக்கியத் தனத்திற்கு இடமில்லாமல் பகிரங்கமாய்க் கடன் வாங்குவோரும், கொடுப்பவரும், விற்கின்றவர்களும், வாங்குகின்றவர்களுமிருந்திடின் பத்திரங்கள் ஜாஸ்தியாக மாட்டா. வியாச்சியங்களும் விருத்தியாகா. ஆனால் பத்திரங்கள் இப்பொழுது ரிஜிஸ்டர் செய்யும் மாதிரியினால் போட்டிக்கிடமுண்டாய் விற்கின்றவர்களுக்கு அதிக லாபம் கிடைக்கின்றதென்றும் கஷ்டப்படுகின்றவர்களுக்கு சௌக்கியமுண்டென்றும் நாட்டின் செல்வம் அதிகரிக்குமென்றும் சொல்வதுண்டு. இவைகளைப்பற்றிச் சொல்லவேண்டியது ஒன்றே. யோக்கியமாயும் பகிரங்கமாயும் செய்யப்படும் நடவடிக்கைகளினால் கஷ்டம் நேரிடினும் அது மேன்மையேயாகும். அயோக்கியமாயும் ரகசியமாயும் செய்யப்படும்



நடவடிக்கைகளினால் லக்ஷம் லாபம் பெறுவதும் சமூக வாழ்க்கைக்குக் குறைவாகும். ஒரு ராஜ்யத்தின் குடிமக்கள் எவ்வளவு அசுத்தமாயிருக்கின்றனரோ அவ்வளவும் ராஜ்யத்திற்கு உறங்தையை விளக்கும். சொத்துக்களைப் பராதீனம் செய்வதில் அரசாங்கத்தார் தலையிட்டுக்கொள்ளக்கூடாதென்றும் அதனால் குடிகளுடைய சுவதந்திரத்துக்குக் குறைவு ஏற்படும் என்றும் சமாதானம் கூறுவது சரியல்ல. சுவதந்தரம் என்கிற விஷயத்தைப் பற்றி ஸ்வராஜ்யத்தை விவரிக்கும் பாகத்தில் ஆராய்ச்சி செய்வோமாக. ஆனால் நாம் கவனிக்க வேண்டியதொன்றுண்டு. அதாவது இம்முறையினால் மேனாடுகளில் யோக்கியமான நடவடிக்கைகளும் நன்னெறியும் ஏற்பட்டிருக்கலாம். அவைகளை யாமறியோம். அம்முறை நம்நாட்டுக்குத் தகுந்ததல்ல என்பதைமட்டில் யாம் வற்புறுத்திக் காட்டுகிறோம். இந்நாட்டினரின் நோக்கத்திற்கும் மேனாட்டாரின் நோக்கத்திற்குமிடையில் விஸ்தாரமான ஒரு கடல் இருக்கின்றது.

மீண்டும், நிலவரிக்குள்ளாக்கப் படாத பல புலங்களிருந்தன. அறத்திற்கு விட்ட இறையிலி நிலங்கள் நீங்க, ஊர் நத்தம், குளம், ஓடை, ஊருணி, ஆறு, படுகை, கம்மாளச்சேரி, வண்ணாரச்சேரி, பறைச்சேரி, வெள்ளான் சுடுகாடு, பறைச்சுடுகாடு, பிணம் போகும் பாதை, பறைச்சேரி நத்தம், தீண்டாச்சேரி, குடியிருக்கை, ஊரிருக்கை, ஈழச்சேரி (சாணாருடையது) மனை, கடைத்தெரு, மீன்பயில் பள்ளம், தேன்பயில்பொதும்பு, களம், மேய்ச்சல்தரை, காடு, களர், உவர்; ஆகியவைகளாம். இவைகளெல்லாம் குடிகளுக்குச் சௌகரியமான அரசாட்சி தர்மங்களாகும். எல்லாவற்றிற்கும் மேலாய் நீர்ப்பாய்ச்சன முறையைக்

குறிப்பிடலாம். காவேரியினின்று பிரிக்கப்பட்டிருக்கும் பல ஆறுகளும் வாய்க்கால்களும் தமிழ் மன்னர்களுக்கு இறவாப் புகழைக்கொடுத்து நிற்கின்றன. ஆறுகளில்லா விடங்களில் ஏற்பட்டிருக்கும் ஏரிகளும் ஜலாதாரங்களும் அநேக ஜில்லாக்களில் இன்றைக்குங் காணப்படுகின்றன. பஞ்சத்தைத் தடுப்பதற்கு நீர்ப்பாய்ச்சனத்தைத் தவிர வேறில்லையென்பதைப் பாரத மக்கள் தெரிந்துகொண்டு அநுஷ்டித்தனர்.

முற்காலங்களிலும் தொழில் வரி, வியாபார வரி, முதலியவை ஏற்பட்டிருந்தன என்பதைக் காட்டக்கூடிய ஆதாரங்களும் காணப்படுகின்றன. கடமை, இறை, ஆயம், வரி, முதலிய பதங்களை குடிகள் ஏன் வரி கொடுக்க வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றன. குசக்காணம், வண்ணாரப் பாறை, தரி இறை, தட்டாரப்பாட்டம், இடப்பாட்டம், செக்கிறை, ஆகியவைகள் உதாரணங்களாகும்.

வியாபாரஞ் செய்தவர்களின் லாபத்திற்கிணங்க வரி வசூல் செய்யப்பட்டது. இம்மாதிரியாய் அநேகம் தொழில் வரிகளைக் குறிப்பிடலாம்.

தமிழர்களின் நாகரிகத்தைப்பற்றி இதுகாறும் நாம் ஆராய்ச்சி செய்தது தமிழ் மக்களின் அரசாங்க முறையைக் குறித்தேயாகும். அம்முறை முற்றிலும் தமிழருக்குரியதா? அல்லது ஆரியர்களுடையதா? அல்லது அவ்விரு இனத்தார்களுடைய கலப்பு முறையா? கலப்பு முறையாயின் எந்த இனத்தார் எந்த இனத்தாருக்கு அதிகம் ஈடுபட்டிருக்கின்றனர்? என்கிற கேள்விகளினால் பல கோட்பாடுகள் தோன்றியிருக்கின்றன. ஆரியர்களுடைய நூல்களில் காணப்படும் திராவிடர்களது விஷயங்கள் ஏற்கனவே



குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவ்வாறே திராவிடர்களுடைய தமிழ் நூல்களிலும் ஆரியர்களைப்பற்றிய குறிப்புக்களிருக்கின்றன என்று விளக்கிக் காட்டக்கூடும்.

தமிழ் நூல்களைக் காலப்பகுதிகளுக் குள்படுத்தக் கூடிய ஆராய்ச்சிகளைச் செய்துவரும் ஆசிரியர்களுக்குச் சங்க நூல்களும் பல அரசர்களின் சாஸனங்களும் மூலாதாரங்களாகும். சாஸனங்களைப் பற்றிய சில விஷயங்கள் முன்னரே கூறியுள்ளோம். இனி சங்க நூல்களை எடுத்துக் கொள்வோம். சங்கம் (ஸ௦ ஙப:) என்பது அகஸ்திய முனிவரால் ஸ்தாபிக்கப்பட்டதோர் பெரிய புலவர் ஸபையாகும். அது, முதல், இடை, கடை, ஆகிய முச்சங்கங்கள் எனப்படும். அந்த மூன்று சங்கங்களிருந்த இடமும், காலமும், அவைகளை இருத்தியவரும், அவர்களின் வரலாறுகளும், அச்சங்கங்களின் அங்கத்தினர்களாகிய புலவர்களும் அவர்களுடைய நூல்களும், வரலாறுகளும் வேற்றுமைப் படுமாறு கூறப்படுகின்றன. ஆயினும் அவைகளால் தெரிந்துகொள்ளக் கூடிய அளவு சரித்திரவரலாறு தமிழறிஞர்களால் பல நூல்களின் வாயிலால் வெளியிடப்பட்டு வருகின்றன. அக்காலத்திய இயற்றமிழின் சிறப்பு வியக்கத் தக்கது. மேனாடுகளில் நூல்களால் சிறப்புற்றோங்கிய காலத்தை "அகஸ்டன் ஏஜ்" (Augustan Age) என்று கூறுவது வழக்கம். அதைப்போல் நம் நாட்டில் இயற்றமிழ் வளர்ந்து நின்ற காலத்தை அகஸ்தியன் காலம் என்று கூறலாம். அகஸ்தியர் இன்றைக்கும் பொதிகை மலையில் வசிக்கிறார் என்கிற நம்பிக்கை நம் நாட்டாருக்கு உண்டு. ஆகையால் தமிழ் இன்றைக்கும் சிறப்புற்றோங்கி நிற்கக் கூடும் என்று எதிர்பார்ப்போமாக.

அகஸ்தியருக்கும் தமிழ்ப்பாஷைக்கும் உள்ள இடைவிடாப்பற்று புராணப்புகழுடைத்து. அவருடைய பன்னிரு மாணவர்களுள் முக்கியரான தொல்காப்பியனார் வடமொழியிலும் தென்மொழியிலும் நிபுணர். அவரது இயற்பெயரே வடமொழியான **திருண தூமாக்கினி*** யாகும். அவர் வம்சப்பெயர் ஜமதக்னியாகும். தொல்காப்பியனார் என்பது அவரது குடிப்பெயரால் தோன்றியதாகும். அவரியற்றியது **தோல்காப்பியம்** எனப்படும். நமக்குத் தெரிந்தவரை அதுதான் பண்டைக்காலத்திய தமிழ் நூல். அதற்குமுன் தமிழ் நூல்களில்லை என்பதில்லை. ஏனெனின் அந்நூல் இலக்கணம். இலக்கியமன்றி இலக்கணமன்று. அது ஐந்திரவியாகரணம் நிறைந்ததென அகஸ்தியருடைய வேறொரு மாணாக்கராகிய பனம்பாரனார் கூறியுள்ளார். மேலும் அரசர் அந்தணர் வணிகர் வெள்ளாளர் என்கிற தொழிற் பாகுபாடுகளுக்குரிய ஜாதிகளும்† அதில் குறிக்கப்படுகின்றன. ஆதலால் வடமொழிக் கலப்புத் தோன்றிய காலத்துக்கு முந்திய தனித்தமிழ் நூல்களை இனி நாம் காண வேண்டி நிற்கின்றோம். ஆரியர்களுடைய சம்பந்தத்திற்கு முந்திய திராவிடர் நிலைமையைக் கண்டுகொள்ள ஆதாரங்கள் காணோம். கபிலரகவலிலும்

* திருணம் = புல், தூமம் = புகை, அக்கினி = நெருப்பு.

† ஜாதி பேதங்கள் திராவிடர்களினிடையில்தான் முதலில் தோன்றின என்று ஒரு ஆங்கிலர் சில ஆண்டுக்களாய் கூறிவருகின்றனர். திராவிடர்களுள் மந்திரவாதிகளிருந்தனர் என்றும் அவர்கள்தான் பிராம்மணர்களாய் மாறிவிட்டனர் என்றும் அபிப்பிராயப்படுகின்றனர். இவ்வபிப்பிராயம் எம்மட்டில் ஏற்றுக்கொள்ளக் கூடியதென்பதைச் சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் நிர்ணயிக்க வேண்டும்.



“முற்படைப் பதனில் வேறாகிய முறைமைபோல்
நால்வகைச் சாதியிந் நாட்டினில் நாட்டினீர்”

என்பது காணப்படுகின்றமையால் ஆரியர்களுடைய நான்கு ஜாதிகள் தென்னாட்டிலும் புகுந்தன என்று தெரிந்து கொள்ளுகிறோம். ஒரு சோழ மன்னனாலும் ஒரு சேர மன்னனாலும் ஆரியர்கள் ஜயிக்கப்பட்டனர் என்பது முல்லைப் பாட்டில் ஒருவாறு கூறப்பட்டுள்ளது. ஆயினும் ஆரியர்களுடைய ஆசாரங்களை அனுசரித்த அரசர்களின் ஆட்சி முறை **பார்ப்பனவகை** என்று குறிப் பிட்டுக் காட்டும் சங்க நூல்களிருக்கின்றன. பதிற்றுப்பத்து முதல் திருக்குறள் ஈறாக நூல்களைச் சோதிக்குமளவில் ஆரியர்களுடைய சம்பந்தம் பலவிதத்திலும் தோன்றுகின்றது. திருக்குறள் ஆரியர்களுடைய ஸநாதன தர்மந்தான் என்று கூறல் தகும். அரசியல் பகுதியைப் படிக்குங்கால் ஆரியர்களுடைய பண்டைக்காலத்திய நூல்களின் எதிர் ஒலியே கேட்கின்றது. அதற்குப்பிறகு ஆரியர்களுடைய ஆதிக்கியம் தென்னாட்டில் மிகுதியும் காணப்படுகின்றது. தமிழ் நூல்கள் ஆரியர்களின் நூல்களுள் பெரும்பான்மையைத் தன்னுள் கொள்ளலாயின.

ஆயினும் ஆரியர்களுடன் சம்பந்தம் ஏற்பட்டவரை திராவிடர்களுக்குரிய தனி அரசாட்சி முறை இல்லை என்று யாவர் கூறத்துணிவார்? ஏனெனின் அக்காலத்தில் திராவிடர்கள் சமூக வாழ்க்கையிலிருந்தனர். சமூக வாழ்க்கையில் தங்கும் நிலைமையை யடைந்த எந்த மனிதர்களும் ஒரு தலைவனன்றித் தங்களைச் சத்துருக்களிடனின்றும் காப்பாற்றிக் கொள்ள முடியாது. ஒரு தலைவனுக்குள்பட்டு அவனது வழியில் நிற்கும் குடிகள் ஒரு ஆட்சி முறைக்குள்

பட்டவர்களெனப்படுவர். திராவிடர்களும் அம்மாதிரிதான் இருந்திருக்க வேண்டும். ஊர், சிற்றூர், பாடி, பள்ளி, சேரி, குறிச்சி ஆகிய முற்றுக்களுடைய தமிழ்ப்பெயர்கள் கொண்ட தலங்களில் தலைவர்களிருந்திருக்கின்றனர். காலவளவில் பாக்கம், பட்டினம், நாடு ஆகிய பெரிய பிரதேசங்களும் உண்டாயின. அங்ஙனமே தலைவர்களும் அவர்களுக்கு மேல் குறுநில மன்னர்களும் அவர்களுக்குமேல் முடிவேந்தர்களும் தோன்றினர். அவர்களும் மனிதர்களானபடியால் மனிதர்களுக் குரிய பகுத்தறிவுக்கு எட்டிய மட்டில் நன்னெறி முறைகளைக் கைப்பற்றி யிருந்தனர் என்றே கொள்ளல் வேண்டும்.

வடநாட்டில் ஆரியர்களும் கிராமங்களையே ஆட்சி முறையாய்க் கொண்டிருந்தனர். கிராமாதிபதிகளும் ஏற்பட்டிருந்தனர். பிறகு நகரங்களும், தேசங்களும், மண்டலங்களும் உண்டாயின. நகராதிபதிகளும், தேசாதிபதிகளும், மண்டலாதிபதிகளும் தோன்றினர். ஆகையால் ஆரியர்கள் தென்னாட்டையடைந்த காலத்தில் அவர்களுடைய ஆட்சி மொழிகள் பிரதி பதங்களாய் விளங்க ஆரம்பித்தன. நாட்டுக்கும் வேந்தனுக்கும் அவனுடைய ஆட்சி முறைகளுக்கும் இன்று பல பெயர்கள் காணப்படுகின்றன. ஆரியர்களுடைய ஆட்சி முறையை முதற்பாகத்தில் விளக்கியுள்ளோம். திராவிடர்களுடைய ஆட்சி முறையை இதுவரை கூறியுள்ளோம்.

இவ்வாறு இரு இனத் தோருக் குரிய நாகரிகத்தை முற்றிலும் பரிசோதிக்கப்புகின் தற்காலத்தில் புறப்பட்டிருக்கும் இனப்பொருமைக்கு இடமிராது என்று நமக்குத் தோன்றுகிறது.



நிற்க; தமிழ் பாஷையின் உற்பத்தியைப் பற்றிய விவாதங்களுள் ஆரியர்களின் வடமொழியி னின்றுதான் திராவிட மொழிகள் தோன்றின என்கிற கோட்பாடு ஒன்றுண்டு. அது முற்றிலும் தற்காலத்திய பாஷாஞானிகளால் ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல. வடமொழி யினின்று பல மொழிகளைத் தமிழர் ஏற்றுக்கொள்ளலாயினர் என்பதற்கு யாதொரு கோட்பாடுந் தேவையில்லை. ஆனால் தென்மொழி யினின்றும் வடமொழியானது எத்துணைப் பதங்களை ஏற்றுக்கொண்டிருக்கின்றது என்பது இன்னும் ஆராய்ச்சி செய்யப்படவேண்டி யிருக்கின்றது. வடமொழிப் பதங்கள் எனத் தோன்றுகின்ற வருணன், ருத்திரன், சிவன், துர்க்கை, கிருஷ்ணன் (கண்ணன்) முக்தம் (முத்து) கர்மா (கருமான்) முதலிய சில வார்த்தைகள் தனித்தமிழ் மொழிகளின் சிதைவுகள்தான் என்றும் அவைகள் ஆரியர்களுடைய ஆதிநூல்களில் காணப் படவில்லை என்றுங் கூறுவாருமுளர்.

மேலும் "வடமொழியானது தமிழ் மொழியோடு கலக்கப் புகுமுன்னரே, முன்னது பேச்சு வழக்கற்று ஏட்டு வழக்காய் மட்டிலிருக்கும் நிலைமைக்கு வந்துவிட்டது. ஏட்டுவழக்கொன்றுமேயுள்ள பாஷையோடு இருவகை வழக்குமுள்ள பாஷை யொன்று கூடியியங்கப் புகுமாயின் முன்னதன் சொற்களே பின்னதன்கட் சென்று சேருமேயன்றிப் பின்னதன் சொற்கள் முன்னதன்கட் சென்று சேரா. இது பாஷை நூலின் உண்மைகளு ளொன்று. இதுவே வழக்காற்று முறை. இம்முறை பற்றியே வடசொற்கள் பல தமிழின்கட் புகுந்தன. தமிழ்ச்சொற்களிற் சில தாமும் வடமொழியின்கண் ஏறுமற்

போயின.''* இக்கொள்கையின் உண்மை ஆராய்ச்சி செய்யப் பாலது. நம் நாட்டுச் சரித்திரத்தின் காலப்பாகுபாடு விஷயமாய் நம்முடைய அபிப்பிராயத்தை முதற்பாகத்தில் கூறியுள்ளோம். அதனால்தான் கி.மு. கி.பி. தேதிகள் இத்தமிழகத்தில் அதிகம் காணப்படா.

மீண்டும் வடமொழி எக்காலத்தில் பேச்சு வழக்கற்று மரித்த பாஷையாயிற்று எனத் தீர்மானிப்பதரிது. ஆரியர்களும் தமிழர்களும் அநேக நூற்றாண்டுகள் போராடிக் கொண்டிருந்தனர் என்பது மட்டில் ஊகித்துக்கொள்ளத் தக்கதேயன்றி வேறு கால நிர்ணயம் ஏற்பட ஏதுவில்லை. ஏட்டுவழக்காய் மட்டிலிருந்த ஊமைப் பாஷையினின்று பேச்சு வழக்கத்திலிருந்த பாஷையையுடையவர் கடன் வாங்கவேண்டிய அவசியமென்னை? பேச்சு வழக்கத்தில் பெருக்கமடைந்து கொண்டிருக்கும் ஆங்கில மொழிகள் சில அங்குமிங்கும் நம் நாட்டுப்பேச்சு மொழிகளுடன் கலந்து கொள்வதை நாம் காண்கின்றோம். ஆனால் அவைகள் இன்னும் நூல்களில் ஏற்றுக்கொள்ளப் படுகின்றனவில்லை. இவ்வாறிருக்க மரித்த பாஷை உயிர்ப்பாஷைக்குள் எவ்வாறு நுழைதல் கூடும்? இக்கேள்விகளுக்குச் சமாதானம் சொல்லக்கூடியது சரித்திர ஆராய்ச்சிதான். அம்முறை நம் நாட்டில் இன்னும் விருத்தியாதல் வேண்டும். வடமொழி மரித்த பாஷையாய் நின்ற காலம் இன்னும் கண்டுபிடிக்கக் கூடவில்லை.

மொழிகளின் இலக்கண மாறுபாடுகளைக் கொண்டு சிலர் கூறுவதாவது: ஆரியர்கள் ஸிந்து நதிக்கரையை யடைந்தகாலத்தில் அவர்களுடைய பாஷை கோச்சையாகத்

* "தமிழ் மொழியின் வரலாறு" வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி.ஏ., இயற்றியது.



தானிருந்தது. அந்தப்பாகத்தில் அக்காலத்தில் வசித்த நாகரிகத்திற் சிறந்த திராவிடர்களின் சம்பந்தத்தினால் தான் ஸம்ஸ்கிருதம் செம்மைபட்டது. அதன் பிறகு வடமொழியாளர் தமிழர்களுடைய ஒழுக்க வழக்கங்களை யுணர்ந்து அவற்றிற்கேற்ப வடமொழியில் நூல்கள் வகுப்பான் புகுந்தனர். அவர்களெல்லாம் ஆன்ம நூற்பயிற்சி மிக்குடையாராயும், கலையுணர்ச்சி சான்றவராயுமிருந்தமை பற்றித் தமிழரது திவ்விய ஸ்தலங்களுக்குப் புராணங்கள் வகுத்தனர். இவ்வாறு "**தமிழரிடத்திலிருந்து பல அரிய விஷயங்களையும் மொழிபெயர்த்துத் தமிழர் அறியுமுன்னரே அவற்றைத் தாமறிந்தனபோலவும் வடமொழியினின்றுமே தமிழிற்கு அவை வந்தனபோலவும்**" வடமொழியாளர் காட்டினர். இதுவும் மேற்கூறிய ஆசிரியர் கருத்து. பருத்த எழுத்தில் காட்டப்படும் விஷயத்திற்கு ஆதாரம் இன்னும் தேடவேண்டி நிற்கின்றோம்.

அவ்வாறே காவிய லக்ஷணம், அலங்காரம், முதலியவைகளைக் கொண்டும் திராவிட பாஷை சிறப்புற்றதென்றும் ஆரியபாஷை அதற்குச்சிறிது குறைந்த நிலைமையிலுள்ளது என்பவர்களு மிருக்கின்றனர். அதற்குதாரணமாய் வடமொழியில் துக்க முடிவுகொண்ட இலக்கியம்* இன்மையைக் கூறித் தமிழில் காணப்படும் சிலப்பதிகாரத்தைச் சிறப்பித்துப் பேசுகின்றனர் திராவிடாபிமானிகள்.

எல்லாவற்றிற்கும் மேலாய் பாஷைக்கும் ஜாதி வித்தியாஸம் கூறுவதுண்டு. ஸம்ஸ்கிருதம் தேவபாஷையாம். தமிழ் பிராம்மணரல்லாதார் (சூத்திர) பாஷையாம்†.

* Tragedy (டிராஜடி) † பிரபஞ்சதாரை 150-151 வது பக்கங்களைப் பார்க்க.

ஆனால் தமிழ் சிவபிரானாலளிக்கப்பட்டது என்றும் அதுதான் தேவபாஷை என்றும் சிலர் கூறுவர். "ஆரியமும் செந்தமிழும் ஆனான் கண்டாய்" முதலிய மேற்கோள்காட்டி இவ்விருபாஷைகளும் தேவபாஷைகள் என்றே ஒரு முடிவு பெறக்கூடும். இரண்டு பாஷைகளுக்கும் காலவரைமுறை கூறுவதிலும் கீர்வாணபாஷை (வடமொழி) அனாதி என்று அப்பாஷாபிமானிகள் கூறுகிற்பர். முறையே தமிழ்ப் பாஷைதான் காலத்தில் முந்தியது என்று திராவிடாபிமானிகள் பறைச்சாற்றுகின்றனர். இரண்டு பாஷைகளைப் பேசும் மக்கள் ஓரிடத்தில் ஒன்று கூடி வாழ நேரிடின் அந்த இரண்டு பாஷைகளின் மொழிகள் கலந்துகொள்வது இயல்பு என்பது தற்காலம் நம் நாட்டில் உபயோகப்படுத்தப் படும் அன்னிய நாட்டு மொழிகளால் கண்டுகொள்ளப் பாலது.

தமிழ் தனித்தமிழாயிருக்க வேண்டுமென்றும் இதர பாஷைகளின் கலப்பு கூடாதென்றும் ஏற்கனவே ஏற்பட்டுள்ள கலப்புக்களை யழிக்க வேண்டுமென்றும் பிடிவாதம் பிடிப்போமேயாகில் தற்காலத்திய நூதன அபிவிருத்திக்குற்றவாறு பல நவீன கலைகளையும் புதினங்களையும் நம் பாஷையில் வெளிப்படுத்துவது அவ்வளவு சுலப சாத்தியமில்லை. சாத்தியமாயின் நலத்திலும் நலமே. பண்டைக் காலத்தில் வடமொழியினின்றும் வார்த்தைகளை அங்கீகாரஞ்செய்துகொண்ட புலவர்களின் அடிச்சுவடுகளை நாமும் பின்பற்றுவதுதான் அவர்களுக்கு நாம் செய்யும் கைம்மாறாகும். இக்காலத்துக் கேற்றவாறு கூடியமட்டில் தேவையான பதங்களை மேனாட்டுப் பாஷைகளினின்றும் எடுத்துக்கொள்வது தவறாகாது.* அவ்விருபாஷைகளின் ஆராய்ச்சியினால்

*இவ்விஷயத்தைப்பற்றிய எமது கருத்துகள் தமிழ்நூற் பொருக்கம் எனும் சிறிய வியாசத்தில் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. (விலை நாலணா.)



இதுவரை ஏற்பட்டிருக்கும் கொள்கைகளாவன:—அவைகள் தனித்தனியே தோன்றியவை; அநேக நூற்றாண்டுகள் தனித்தனியே வளர்ந்து கொண்டிருக்குங்கால் இரண்டு பாஷைகளும் சந்திக்க நேரிட்டது; அக்காலத்தில் இயல்பாய் ஒன்றுடன் மற்றொன்று உறவாடலாயிற்று; அவைகளின் காலவரையை அறுதியிடுதல் சாத்தியமில்லை; அவைகளுள் மரித்தமொழி யெனப்படும் ஸம்ஸ்கிருதம் எக்காலத்தில் அக்கதி பெற்றது என்பது அறியக்கூடியதாயில்லை; வடமொழியினின்று தென்மொழி பெற்றுக் கொண்டவை வெளிப்படையாய்க் காணப்படுகின்றன; ஆனால் தென்மொழியினின்று வடமொழி பெற்றுக்கொண்டவை அவ்வாறு விசதமாய்ப் புலப்படவில்லை; என்பவைகளே.

நாகரிகத்துக்குரிய மற்றுமுள்ள துறைகளிலும் தமிழர்களின் முன்னேற்றத்தைக் கூறப்புகின் வியாபாரம் என்பது முதலில் நம் முற்படுகின்றது. இவ்விஷயமாய்த் தமிழர்களுக்கு அன்னிய நாட்டார்களுடன் ஏற்பட்ட சம்பந்தத்தைக் குறிக்கும் ஆதாரங்களைப் பன்முறை கூறியுள்ளோம். வியாபாரத்தினால் ஒரு நாட்டுக்கு விளையும் செல்வத்தின் பெருமை கணக்கிடத்தக்கதன்று. அந்த வியாபாரமும் ஸ்வராஜ்ய முறைப்படி நடைபெறின் உள்நாட்டுத்திரவியம் காவிரியாற்றின் நீர்வளம் பெற்ற பூமியின்கண் பழுத்துக் கொழிக்கும் தானிய மணிகளுக்கு மேலாய்க் குவியும். அன்னிய நாட்டரசு முறைப்படி அவரது நாட்டுச் செல்வத்தை விருத்தி செய்து கொள்வதற்கு அவரது தேசாபிமான மேலீட்டால் வியாபாரம் நடைபெறின் கொள்ளிடத்தின் நீர் கடலுக்குள் புகுவதைப்போல் உள்நாட்டுச் செல்வம் வெளி நாட்டினுள் பாயும்

தமிழரசாட்சியில் நடைபெற்ற கப்பல் வியாபாரங்களைக் குறிக்கக் கூடிய அறிகுறிகள் பல நிற்கின்றன. தமிழ் நூல்களில் காணப்படும் நெய்தல், கலங்கரை விளக்கம், பட்டினம், ஓடம், முதலிய மொழிகளும் கடலாடு காதை போன்ற நூலதிகாரங்களும் திரைகடலோடியும் திரவியம் தேடு என்பதைப்போன்ற பழமொழிகளும் கூறப்படலாம். சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடிய 'பட்டினப்பாலையில்' வர்ணிக்கப்பட்டிருக்கும் புகார் பட்டினத்தின் பெருமை அதற்குப் பெருஞ் சான்றாகும். தொண்டி, முசிறி, வைக்கரை, கொற்கை, குமரிக்கோடு ஆகிய துறைமுகப் பட்டினங்களிருந்தன.

வெளிநாட்டு வியாபாரத்தில் சிறந்த நாடு உள்நாட்டு வியாபாரத்திலும் வளர்ந்துகொண்டிருந்தது என்பது சொல்லாமலே விளங்கும். அவ்வாறு வெளிநாட்டு வியாபாரமும் உள்நாட்டு வியாபாரமும் நம்நாட்டுக்குதவியாய் வலுமை பெற்றிருந்தமையால் முற்காலத்தில் தமிழர்களுக்குள் செல்வப்பெருக்கம் ஏற்பட்டிருந்தது. பரதகண்டத்துக்குக் கிழக்கிலும் மேற்கிலும் நம்நாட்டு ஒளி வீசிற்று. அதனால் அன்னிய நாட்டுக்கிரஹணம் பிடித்தது. தென்னாட்டின் மக்களுக்குப் பிழைக்கும் வழிக்குரிய தொழில்கள் பல இருந்தன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலத்தில் ஐவகைப் பாகுபாடுகளுக்கிணங்க, குறிஞ்சியில் வேடர்களும், முல்லையில் ஆயர்களும், மருதத்தில் உழவர்களும், நெய்தலில் நுளையர்களும், பாலையில் மறவர்களும் காணப்பட்டனர்.

பூமிக்குள்ளினின்றும் கிடைத்த தாதுவர்க்கங்களை உபயோகத்துக்குக் கொண்டுவரக்கூடிய தொழிலாளர்களு



மிருந்தனர். இரும்பு, பித்தளை, வெண்கலம், தாம்பிரம் ஆகிய வேலைகளைச்செய்த கருமான்கள், தங்கம் வெள்ளி ஆகிய பொருள்களை வேலை செய்த தட்டான்கள், பஞ்ச உலோகங்களினுதவியால் விக்கிரங்கள் செய்த சிற்பிகளும் (ஸ்தபதிகளும்) இருந்தனர். அவர்களின் பணிக்களறிகள் ஏராளமாயிருந்தன.

மரவேலை செய்த தச்சர்கள், கருங்கல் வேலை செய்த தச்சர்கள், செங்கல் ஓடு முதலியவைகள் சூளையிட்டவர்கள் ஆகிய கட்டிட வேலைக்காரர்களிருந்தனர். வஜ்ரலேபம் என்கிற ஒரு கல் ஒட்டியின் உதவியைக்கொண்டு கல் பிம்பங்களின் உடைந்த பாகங்களை ஒன்று கூட்டும் ஆச்சரிய சக்தியை உடைத்தாயிருந்தனர்.

கடலுக்குள்ளினின்றும் முத்து, சங்கு, சோழி முதலிய பல உபயோகமுள்ள பொருள்கள் வெளி யேற்றப் பட்டன.

473 (PBI) NLB

சமூக வாழ்க்கைக்குரிய வண்ணான் அம்பட்டன் குயவன் முதலிய பல தொழிலாளிகளுமிருந்தனர். அவர்கள் குடிகளின் ஆதரவினாலும் அரசாங்கத்தாலும் ஊதியமும் மானியமும் பெற்றிருந்தனர்.

மேற்கூறப்பட்ட தொழிலாளர்களின் யுக்திகளும் புத்தி சாதுரியங்களும் வேலைத் திறமைகளும் நன்கு மதிக்கப்பெற்றன. அநேக நூற்றாண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட கோவில்களும் விக்கிரகங்களும் கட்டட அமைப்புகளும் சித்திர வேலைகளும் இன்றைக்கும் உயிருடன் நிற்கின்றன. தமிழகத்தில் காணப்படும் சில தேவாலயங்களில் சூரியபூஜை என்கிற நாட்கள் பிர[illegible]

18232

தோன்றுவதுண்டு. அதாவது அந்த நாட்களில் சூரியனுடைய கிரணங்கள் அதின் மூலஸ்தானத்திலுள்ள லிங்கத்தின் சிரத்தில் சுமார் கால்மணி நேரம் காலையிலாவது மாலையிலாவது விழுவதுண்டு. அப்படி விழும்படிச்செய்வது கோபுர வாயிற்படி அமைக்கப்பட்டிருக்கும் கணக்கு முறையே காரணமாகும்.*

தமிழ் மக்கள் ஜீவனம் செய்வதற்குத் தேவாலயங்களும் ஆதாரங்களாகும். பூஜைசெய்யும் குருக்கள் முதல் மெய்காவல்காரன் வரை அநேக தொழிலாளிகள் தேவையானதனால் பலரும் பிழைக்க இடமுண்டு. பிழைக்கும் வழிகளுள் வைத்தியமும் ஒன்று. மக்களுடலுக்குரிய பல பிணிகளைத்தீர்க்க மருத்துவர்களும் தேவை. ஐம்பெருங்குழுவில் அவர்களுக்குமிடமிருந்தது என்று ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். அகஸ்தியர்தான் வாகடகுரு. அவர் பெயரால் நம் நாட்டில் தோன்றியிருக்கும் வைத்திய நூல்கள் இன்னும் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டியிருக்கின்றன. நிமித்தர் எனப்படும் ஜோதிடர்களுக்கும் பிழைப்புண்டு. தென்னாட்டு மக்களுக்கு எக்காலத்திலும் ஜோசியத்திலுள்ள நம்பிக்கை அளவிடத்தக்கது. தமிழகத்தில் குறி, கணி, என்று சொல்லும் மந்திரவாதிகளும் தந்திரவாதிகளும் பலர் எக்காலத்தும் இருந்திருக்கின்றனர். தவிர மக்களுக்குச் சந்தோஷத்தை யுண்டாக்கிப் பிழைக்கும் கூத்தாடிகள், பாடகர்கள், வேஷதாரிகள் ஆகியவர்களுமிருந்தனர்.

கருமவினைஞர் என்று சொல்லப்படும் புரோகிதர்கள் தமிழர் சமூக வாழ்க்கையில் அரண்மனை அந்தப்புரத்திலும் இடுகாட்டிலும் இன்றியமையாதவர்களாய் வாழ்ந்திருந்தனர். இப்பொழுதும் அப்படியே இருந்து வருகின்றனர். அவருடைய தொழிலும் ஒரு பிழைக்கும் வழியே. அவர்களுக்கு முற்காலத்தில் ஏற்பட்டிருந்த நிலைமை பல சங்க நூல்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தின் அதிகாரத்தில் அமர்ந்து பிழைத்தவர்களைப்பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.

* இம்மாதிரி தலங்களின் பட்டி ஒன்று சேகரித்து இந்நூலின் முடிவில் கூட்ட முயற்சி செய்கின்றோம்.



இனிக் கல்வியும் பிழைக்கும் வழிகளுள் ஒன்றெனக் கூறுவாம். தமிழகத்தின் கல்வியைப்பற்றி (இப்பாகம் 90-வது பக்கத்தில்) குறிப்பிட்டுள்ளோம்.

தமிழர்களின் கல்வி சிறப்புற்றோங்கி வளர்ந்த காலம் தமிழ்நாடு ஸ்வராஜ்யம் பெற்றிருந்த காலம் என்பதை வற்புறுத்துகின்றோம். புலவர் புகழ்ச்சிக்கு இலக்காய் விளங்கின மன்னர்களின் பரம்பரை அளவுக்கு மிஞ்சியதாகும். மண்டலங்களையாண்ட முடிவேந்தர்களும் கூற்றங்களை யாண்ட குறுநில மன்னர்களும் பிரபுக்களும் தனவந்தர்களும் தம் சக்திக்கு மிஞ்சி புலவர்களுக்குதவி புரிந்தனர். கவிகளுக்குக் கனகாபிஷேகம் சொரிவது சர்வ சாதாரணமாயிருந்தது. கரிகால் சோழன் கடியலூர் உருத்திரங்கண்ணனாருக்கு அளித்த பொன் குவியல் கலிங்கத்துப்பரணியில் காணப்படும். நன்னன் வேண்மான் புலவர்களுக்களித்த பரிசுகள் இன்றைக்கும் மறக்கப்படாதவை. மதுரகவிகள் மாட்டு செலுத்தப்பட்ட மரியாதைகள் மட்டற்றவை. பெருஞ்சேரலிரும் பொறையைப்பாடிய மோசிகீரனாருக்கு அவர் உறங்குங்கால் அவ்வரசன் செய்த தொண்டு தமிழ் நாட்டிலன்றி வேறெந்த நாட்டில் நடைபெற்றிருக்கும்? சங்கம் வளர்த்தோங்கிய பாண்டி நாட்டரசர்களின்

கொடைகள் கணக்கிடத்தக்கவையன்று. அன்றேல் எவ்வாறு ஆயிரக்கணக்கான புலவர்கள் அக்காலத்தில் தோன்றியிருக்கக்கூடும்? தற்காலத்தில் முற்காலத்திய வித்துவான்களைப் போல் காணமுடியாதென்பது தவறு. அவர்களைப் போற்றுவாரற்றே அவர்கள் பெயரையும் காணோம். முற்காலத்தைப்போல் இக்காலத்திலும் இசை, கவி, ஓவியம், நவீன சாஸ்திரம் முதலிய பல கலைகளிலும் சிறந்தவர்கள் எவ்விடத்திலும் தோன்றல் கூடும். அவர்களுக்குதவியாய் தமிழ்த் தெய்வத்திற்குக் கோவிலென விளங்கக்கூடிய பல் கலைக்கழகங்கள் பல தென்னாட்டில் தோன்றித் தழைத்தோங்கல் வேண்டும்.

இனி மதவிஷயத்தை எடுத்துக்கொள்வோம். தற்காலத்தில் நமக்குத் தெரிந்தமட்டில் திராவிடர்களின் பூர்வீக மதம் இன்னதுதான் என்று சுட்டிக்காட்ட ஆதாரங்கள் இல்லை. உலகத்தில் நாகரிகத்தில் முன்னேற்றமடைந்திருக்கும் எந்த இனத்தோரும் மத உணர்ச்சி இல்லாமலிருக்கவில்லை. ஆகையால் திராவிடர்களுக்குச் சொந்தமெனக்கூடிய ஒரு மதக்கோட்பாடு இருந்திருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொள்வோமாக. ஆனால் இப்போழ்து காணப்படும் மதாசாரங்களைச் சீர்தூக்கிப்பார்க்கின் தமிழகத்தின் மத உணர்ச்சி பல்விதக் கொள்கைகளின் கலப்புற்றது என்று புலப்படுகின்றது.

இந்நாட்டில் திராவிடர்களுக்கு முந்தி வசித்தவர்கள் நாகர்கள் என்று சொல்லப்படுகின்றனர். நாகூர், நாகை, என்கிற ஊர்ப்பெயர்கள் அவர்களுடைய பூர்வீக வாசஸ்தலங்கள் என்று சிலர் நினைக்கின்றனர். அவர்களின் வம்சத்தவர் ஆஸ்ஸாம், சோடா நாகப்பூர், முதலிய பல இடங்



களில் இன்றைக்கும் இருப்பதாய்த் தெரிகின்றது. பாரத மஹா சமுத்திரத்தில் உள்ள தீவுகளில் இருப்பவர்களுள் சில இனத்தார்களின் நடை உடை பாவனைகளினால் அவ்விடங்களில் அவர்கள் பரவிநின்றிருந்தனர் எனக் கூறலாம்.

நாகத்தை அதாவது பாம்பைப் பூஜை செய்தவர்கள் என்று அப்பெயர் பெற்றனர் போலும். அல்லது ஆதிசேஷனுக்குச் சகோதரனான வாசுகியென்கிற நாகர் குலத்தில் பிறந்தவர்களென்று புராணக்கதையும் கூறப்படலாம். நாகர்கள் தமிழகத்திலும் இருந்திருக்கவேண்டுமென்றும் அவர்களுடைய வழியைத் திராவிடர்கள் ஒருவாறு பின்பற்றினர் என்றும் நாக பிரதிஷ்டை செய்தல், நாகபஞ்சமி விரதம் பூணல், பாம்புப்புத்துக்குப் பால் வார்த்தல், ஆகிய ஆசாரங்களால் அறிந்து கொள்ளப்பாலன. மணிமேகலை முதலிய பண்டைய நூல்களில் காணப்படும் சமூக வாழ்க்கையின் இடையில் நாகர்களின் பெயரும் காணப்படுகின்றது. பலமாக்களின் ஆசாரங்களும் காணக்கிடக்கின்றன. மிருக பலியளித்தல் உடலை விட்டுப்பிரிந்த உயிர்களுக்கு (அதாவது பிரேத ஜீவன்களுக்கு)ப் பூஜையிடல், மரித்த யுத்தவீரர்களுக்கு வீரக்கல் நாட்டி அதை வணங்கல், அவர்களது சிலை உருவங்களுக்குக் கோவில் கட்டி வைத்தல் ஆகியவைகள் கலப்பு ஒழுக்கங்கள் எனக் கருதப்படுகின்றன. பிசாசு மந்திரங்கள் ஓதல், பேயோட்டல், சூன்னியம் வைத்தல், ஆவேச ஆட்டங்கள், ஆகியவைகள் திராவிடர்கள் பால் காணப்படுவன அக்கலப்பின் பயனெனக் கருதப்படலாம்.

நம் நாட்டினில் விக்கிரகாராதனை தோன்றியது திராவிடர்களுடைய சொந்த ஆசாரம் என்றும் அதுதான் ஆரியர்களால் அனுசரிக்கப்பெற்றதென்றும் ஒரு கோட்பா

டுளது. ஆனால் சரித்திர ஆராய்ச்சிக் கெட்டியவரை புத்தர்களுடைய ஆசாரம் அது என்று கூறப்படல்வேண்டும். புத்தர்களும் ஜைனர்களும் தென்னாட்டில் தோன்றிய காலத்தில் அவர்களுடைய நாகரிகம் தமிழகத்தில் உளறிற்று. அவர்களால் இயற்றப்பட்ட பல தமிழ் நூல்களும் அவர்களைப்பற்றிப் பேசும் நூல்களும் அனேகமிருக்கின்றன. திருவள்ளுவர் ஜயினர் என்றும் அவருடைய மதக்கொள்கை ஜயினம் என்றும் தற்போழ்து சில அறிஞர்களால் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகின்றது. ஆயினும் அவருடைய மதத்தை அறுதியிட்டு உறுதிமொழி கூறுவது கடினம். பிறகு ஆரியர்கள் தமிழகத்தில் நிலை பெற்று நிற்க நேரிட்ட காலம் முதல் மொழிக்கலப்பு ஆசாரக்கலப்பு முதலியவைகள் ஏற்பட்டதேபோல் தெய்வ வணக்க முறைகளின் கலப்பும் ஏற்பட்டது. பிரம்மா, விஷ்ணு, சிவன், ஆகிய மும்மூர்த்திகளும் அவர்கள் மனைவிமார்களும் மக்களும் சூரியனும் அக்கினி முதலிய அஷ்டதிக் பாலர்களும் ஆரியர்களின் தேவதா பரம்பரைகள் என்று அனேக ஆண்டுக்களாய்க் கூறப்பட்டு வந்தனர். ஆனால் தற்காலம் சில ஆண்டுக்களாய் திராவிடர்களைப் பற்றிய ஆராய்ச்சியின் பயனாய் சிவன், ருத்திரன், உமை, சுப்பிரமணியன், வருணன், இந்திரன், ஆகிய சில தெய்வங்கள் திராவிடர்களுடைய சிருஷ்டிகள் என்றும் அவைகள் ஆரியர்களுடைய மதாசாரங்களுள் புகுந்தன என்றும் கூறப்படுகின்றன. இம்மாறுதல்களுக்கு ஆதாரங்கள் அம்மொழிகளின் வரலாறு எனப்படுகின்றது. செம்மல் என்கிறமொழியினால் சிவன் என்கிற வடமொழிப் பெயரும் செம்மை வர்ணத்தினால் ருத்திரன் என்கிற வடமொழிப் பெயரும் தோன்றின என்றும் கோற்றவை என்கிற தமிழ்த் தெய்வம் உமை என்கிற ஆரிய



தேவதையாக்கப் பட்டனள் என்றும் மலையாசனுக்கும் கொற்றவைக்கும் மகனான முருகன் ஆரியர்களுக்கு சுப்பிரமணியனாய் விட்டான் என்றும் கோட்பாடுகள் கிளம்பியிருக்கின்றன. இவைகளுக்குப்போதுமான ஆதாரங்கள் இன்னும் கிடைக்கவில்லை என்றே யாம் கருதுகின்றோம். ஏனெனின் அம்மொழிகளின் ஆராய்ச்சி முறை நிலைபெறவில்லை. நிற்க; தேடப்படுதற்குரிய பொருள் எனப் பொருள்படும் வடமொழியான மிருக்ய : என்பதன் சிதைவுதான் முருகன் எனும் மொழியோ என்கிற ஐயம் நமக்குண்டு. இம்மாதிரியான மொழிஉச்சரிப்பு மாறுதல்கள் தோன்றுவது இயல்பு. இது ஆரிய மதாபிமானம் எனக் கருதப்படாமல் தேடப்படும் சரித்திரப்பொருள் எனக் கருத ப்பட வேண்டும்.

இம்மாதிரியான விஷயங்கள் சரித்திர ஆதாரங்களெனக் கொள்ளப்படுவதற்கு இன்னும் சரியான ஆராய்ச்சிகள் தோன்றவேண்டும் என்பதற்கையமில்லை.

மேலும் முற்காலத்திய தமிழர்களின் தனி மத விஷயமாய் ஒரு கோட்பாடுரைப்பது தற்போழ்து கூடுமானதன்று. இதுவரை தெரிந்தமட்டில் திராவிடமதம் என்பதொன்று தென்படவில்லை. திராவிடர்களுடைய நாகரிகத்தை அறிவிக்கும் தமிழ் நூல்களினின்றும் யாதொரு ஆதாரத்தையும் காணக்கூடவில்லை. ஆனால் ஆரியர்களுடைய ஆதிக்கியம் ஏற்பட்டது முதல் அவர்களுடைய மத உணர்ச்சியே அதிகமாய்க் காணப்படுகின்றது. வேதங்கள், ஸ்மிருதிகள், வர்ணாசிரமதர்மங்கள், புராணங்கள் ஆகிய பல ஆரிய தர்மங்களும், திராவிடர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. சைவம், வைஷ்ணவம், வேதாந்தம், ஆகிய கோட்பாடுகளும் அவைகளுள் தோன்றியிருக்கும் பாகுபாடுகளும் உட்பாகு

பாடுகளும் தமிழகத்தில் காணப்படுகின்றன. தமிழ்ப் பாஷையிலும் காணப்படுகின்றன. அவைகள் அக்காலத்தில் வேற்றுமைப்பாடின்றி அந்தரங்கக் கொள்கைகள் எனக் கருதப்பட்டன. வேற்றுமை தோன்றியது சரித்திர மத்திய காலமெனப்படலாம்.

ஒருகால் திராவிடர்களுடைய மதத்துக்கு ஆரியர்களுடைய மதம்போன்ற உடையளித்திருப்பினும் இருக்கட்டும். அம்மாதிரியான மதத்தில் ஆரியர்களுடைய தர்மங்களே பெரும்பாலும் காணப்படின் குறையென்ன? அக்காலத்திய திராவிடர்களும் ஆரியர்களும் அறிந்தும் அறியாமலும் பல விதத்திலும் ஒருமைப்பாடும் அமைதியும் அடைந்தனர் எனின் அதில் குற்றமென்ன? ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் ஏற்பட்ட கலப்புக்களுள் மதத்தில் ஏற்பட்டுள்ளதே அதிகம் காணக்கிடக்கின்றது. ஆதலாலன்றோ பரதகண்டத்தின் மத உணர்ச்சியை ஹிந்துயிஸம் (ஹிந்துமதம்) என்று கூறாமல் ஆரிய தர்மம் என்று பெயரிட்டழைத்திருக்கிறோம். ஆனால் இப்பெயர் ஆரியர்கள், திராவிடர்கள் எனும் வேற்றுமையைக் கிளப்பும் தன்மையை யுடைத்து எனக் கருதி "திராவிடர் ஆரியர் என்னும் வேற்றுமையை மறக்கச்செய்யும் ஆற்றல் ஹிந்து என்னுஞ் சொல்லிலிருப்பதால் ஒருமைப்பாடு நோக்கி அதைக்கொள்வது தவறாகாது" என்று "நமது பாரத கண்டத்தின்" முன்னுரையாசிரியர் வலியுறுத்துகின்றனர். கவீந்திரராகிய ரவீந்திரநாதரும் ஒரு தருணத்தில் அவ்வாறே குறிப்பிட்டனர். ஆனால் ஹிந்துயிஸம் பொய்ப்பெயர் என்பது தவறாகாது. அதை எவ்வாற்றாலும் நீக்கவேண்டும் என்பது எம் கருத்து. ஆனால் பெயரில் என்ன இருக்கின்றது? என்கிற வியவகாரம் ஒருபக்கல் நிற்க, அந்நியநாட்டு மனப்பாங்குக்கு ஈடுபட்டுத்



தம் நாட்டையும் அதின் உரிமைகளையும் மறந்த நம் நாட்டினர்களின் உள்ளத்தை மாற்றுவதற்காகப் பொய்ப்பெயர்களாகிய இந்தியா, ஹிந்துக்கள், ஹிந்துமதம், என்பவைகளை அறவே மாற்றவேண்டுமென்று, முறையே பரதகண்டம், பாரதமாக்கள், ஆரிய தர்மம் என்று நாமகர்ணம் சூட்டினோமேயன்றி வேத சம்பந்தமானதன்று என்று நினைத்துக் கூறவில்லை. ஆனால் சரித்திர சம்மதமன்றெனக் கருதினோம்.

ஒருகால் பாரததர்மம் என்று ஏன் கூறியிருக்கக் கூடாதெனின், அதற்குப்பல காரணங்களிருக்கின்றன. பாரத என்கிற அடைமொழியை ஸமஷ்டியாக (அதாவது ஒரே மொத்தமாக)ப் பேசுங்கால் இந்நூலில் அதை உபயோகித்திருக்கிறோம். அதாவது இந்நாடு முழுவதையும் குறிக்குங்காலத்தில் பரதகண்டம் என்றும் தனித்தனி பாகத்தை அதன் பெயரால் குறிப்பிட்டிருப்பதைப்போல் இந்நாட்டில் பிறந்து வளர்ந்தவர்களையும் அதைச் சொந்த நாடாய்ச் செய்து கொண்டவர்களையும் மொத்தமாய்க் குறிப்பிடுங்காலத்தில் அவர்கள் எல்லோரையும் பாரதமக்கள் என்றே வியவகரித்து வருகிறோம். தனித்தனியாய்ப்பேசுங் காலத்தில் தனித்தனிப் பெயராலேயே வியவகரித்து வருகிறோம். ஆரியர்கள், திராவிடர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், புத்தர்கள், உதாரணங்களாம். ஆனால் மத உணர்ச்சியைப்பற்றிப் பேசும்போழ்து இந்நாட்டினர் அனேகமாய் எல்லோரும் ஹிந்துமதம் எனப்படும் ஆசாரங்களை அநுசரிப்பதனாலும் அது ஆரியதர்மம் எனப்படும் முறையைப் பெரும்பாலும் தழுவிநிற்கின்றமையாலும் திராவிட மதம் என்று தனி மதம் ஒன்று காணப்படாததனாலும் ஆரியதர்மம் என்பதையேயாம் வற்புறுத்துகின்றோம். முன்னுரை யாசிரியர் நன்மொழி கூறியிருப்பதைப்போல் அந்நிய

நாட்டுப் பெயருக்கிணங்குகின்றவர்கள் ஆரிய தர்மத்தைப் பின்பற்றி வரும் ஆரியர்கள் என்று சொல்லிக்கொள்ள ஏன் ஒருப்படுகிறாரில்லை? தமிழர் மதம் என்பது வெளிப்படும் வரை ஆரியதர்மம் என்பதைச் சரித்திர ஆதாரத்தைப் பின்பற்றி ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது? ஆயினும் வேற்றுமையை யொழிக்கும் ஆற்றலுடையது பாரததர்மம் அல்லது **வேதாந்தம்** எனும் உள்ளன்புதோன்றிவிடின் **ஆரியதர்மம்** என்கிற பெயர் தானாய் நழுவி விடும். அக்காலத்திற்கு முகமன் கூறுவோம். எவ்விதமாயினும் அந்நிய நாட்டுப் பொய்ப்பெயர் மறைந்துவிடவேண்டும் என்பது எம்முடைய அந்தரங்க ஆர்வம்.

தமிழகத்தின் மத உணர்ச்சியின் தத்துவங்களை ஈண்டெடுத்துக் கூறுவதற்கு இடமில்லை. புறச்சமயங்களை நீக்கித் தற்காலத்தில் தென்னாட்டில் காணப்படும் மதங்களுள் சைவ மதமே பெரும்பான்மையோருடையது. அதைச் சுமாராய் முக்கால்பங்கு என்று கணக்கிடலாம். பாக்கியுள்ள கால் பங்கு வைஷ்ணவம் எனப்படலாம். சைவ சமயக்குரவர்களும் வைஷ்ணவாசாரியர்களும் பலர் தோன்றி என்று மிறவாவண்ணம் அவர்களுடைய மார்க்கங்களை உலகத்தோருய்யுமாறு அருளியிருக்கின்றனர். சைவ மறைகளும் வைஷ்ணவ பிரபந்தங்களும் ஞானக்கடல்கள் என்பதை யாவர் அறியார்? அத்துவைதம், விசிஷ்டாத்துவைதம், துவைதம், சைவசித்தாந்தம் எனப்படும் வேதாந்தப்பாகுபாடுகளும் தமிழர்களுள் காணப்படுகின்றன.

தென்னாட்டு மத உணர்ச்சியைப்பற்றிய விசேஷக் கூற்று ஒன்று யாதெனின் சிற்றறிவினர் முதல் பேரறிவினர் ஈறாக உள்ள மனிதர்கள் யாவருக்கும் அவரவர்களுடைய மனோநிலைமைக்கேற்றபடி படிப்படியாய் பக்தி மார்க்கமும்



ஞானமார்க்கமும் புகட்டப்பட்டிருக்கின்றன. பேய் பிசாசுகளுக்குப் பயப்பட்டுப் பலி பூசை படைப்பவர்களுக்கும் பிரம ஞானம், வேதாந்தம், சந்நியாசம், மோக்ஷம், ஆகியவைகள் பெயருக்கு மட்டிலாவது தெரியாமலில்லை. தவிர, ஆஞ்ஞானத்தில் எத்துணை ஆழ்ந்திருப்பவர்களுக்கும் பல தெய்வங்களை வணங்குகிறவர்களுக்கும் கடவுள் ஒருவர் உண்டு என்பது தெரியாமலில்லை. ஆனால் ஒரு கடவுளுக்குத் தான் பல நாமங்களா அல்லது உண்மையிலேயே பல ரூபங்களுடன் அவர் விளங்குகின்றனரா அல்லது தனித்தனி தேவதைகளுக்கு மேலாய் அவர் வீற்றிருக்கின்றனரா அல்லது யார் யார் எப்படி எப்படி நினைக்கின்றனரோ அப்படி அப்படி தோன்றித் தோன்றி மறைந்து விடுகின்றனரா ஆகிய பல பிணக்குற்ற பாகுபாடுகளை விசாரணை செய்துத் தீர்மானஞ் செய்கின்றவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவே.

பக்தியிலும் ஞானத்திலும் சிறந்த சிவனடியார்கள் ஆழ்வார்கள் முதலியவர்களின் வரலாறுகள் பல புராணங்களின் வாயிலால் அறிந்து கொள்ளப்பாலன. தென்னாட்டு மன்னர்களுள் எத்துணையோ பெயர்கள் பெரிய புராணம், திருவிளையாடல் புராணம், குருபரம்பரா பிரபாவம், ஆகிய கிரந்தங்களில் காணப்படுகின்றனர். மனுமுறை கண்ட சோழன், பொற்கையான் மாறன் பாண்டியன், குலசேகர ஆழ்வார், ஆகியவர்கள் உதாகரணங்களாவர்.

மேலும் தமிழ் வேதங்கள் எனக் கூறப்படும் தேவாரம் திருவாசகம் திருவாய்மொழி ஆகிய பக்தி நிறைந்த தமிழ் நூல்கள் தென்னாட்டு மதப்பற்றின் சரித்திர நிதிகளாகும். அவைகளைப் புதையலெனக்கண்டு ஆராய்ச்சிசெய்து விரிவாய் வெளியாக்கிவரும் ஆசிரியர்கள் பலருளர். அவர்களுள் தமிழ் வரலாறு என்பதன் கிரந்த கர்த்தா ஸ்ரீமான்

ஸ்ரீநிவாஸம் பிள்ளை அவர்களின் ஆர்வம் போற்றத்தக்கதாகும். அதில் தமிழ்நூல்களின் காலட்பாகுபாடுகள் வரன் முறைகளுக்குட்படுத்தப்பட்டிருக்கின்றன.

மேற் கூறப்பட்டவைகள் தவிர தற்காலத்திய கவிகள் எனப்படுவோர் எண்ணிலாதிருக்கின்றனர். அவர்களைப் பற்றிய பலவரலாறுகளும் அவர்களின் நூல் விசேஷங்களும் இன்னும் ஆராய்ச்சி செய்யப்படவேண்டி நிற்கின்றன.

இதுவரை தமிழர் நாகரிகத்தைப்பற்றி நாம் விவரித்து வந்தது போதுமானதென்று நாம் நினைக்கின்றோமில்லை. ஆனால் அதை ஒருவாறு குறிப்பிட்டிருப்பதைக் கொண்டு இனியும் உண்மையை உசாவுதல் தமிழர்களுடைய கடமையாகும். உதாரணமாய் பண்டைக்காலத்திய பெண்மக்களின் நிலைமை, கல்வி, ஒழுக்கம், வீரம், தீரம், உரிமை ஆகியவைகள் ஆராய்ச்சி இன்னும் செய்யப்பட வேண்டும்.

அதனால் சரித்திர ஞானம் வளருவதுடன் அன்னிய நாட்டுக் கிரஹணமும் தானாய் விலகி சூரிய கிரணமும் மீண்டும் பரவலாகும். தமிழகத்தின்கண் தமிழ்ச்சங்கங்களும் புலவர்களும் வெளிக்கிளம்புவதற்கிட முண்டாகும். தமிழ் நூற் பெருக்கம் ஏற்படும். தமிழர்களின் உரிமை தழைத்தோங்கும். தமிழ் நாட்டுக்கல்வி முறை மீண்டும் தோன்றும். அக்காலத்தில் பாரத மக்கள் ஸ்வராஜ்யப்பேறு பெறுவர்.



## அத்தியாயம் :—4

## போர்த்துகீஸர்கள்.

### முதல் சருக்கம்.

### நவீன மார்க்கக் கிளர்ச்சிகள்.

நமது பாரதகண்டத்தைப் பிடித்த அன்னிய நாட்டுக் கிரஹணத்தைப்பற்றி இதுவரை கூறப்பட்டதோர் பக்கல் நிற்க, இனி ஐரோப்பியர்களின் கண்ணோட்டத்தையும் அதனால் தோன்றிய லாப நஷ்டங்களையும் ஆராய்ச்சி செய்வோமாக. மேனாட்டார்களுக்கும் இந் நாட்டார்களுக்கும் ஏற்பட்ட சம்பந்தத்திற்குரிய பல காரணங்களுள் சிலவற்றை யேனும் இதுகாறும் இந்நூலைப்படித்தவர்கள் அறிந்து கொண்டிருக்கலாம்.

கிறிஸ்து பிறப்பதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே அக்காலத்தில் நாகரிகத்தில் சிறந்த கிரேக்கர்கள், உரோமர்கள், எகிப்தியர்கள், பாரஸீகர்கள், ஸுமேரியர்கள், ஆகிய பல இனத்தார்கள் இப்பாரத கண்டத்துடன் வியாபாரஞ்செய்து கொண்டிருந்தமையால் இக்கண்டத்தின் சிறப்பை வெளி நாட்டார்கள் செவ்வனே தெரிந்துகொண்டிருந்தனர் என்பது பல ஆராய்ச்சிகளால் தெரிகின்றது எனப் பல முறை கூறியுள்ளோம். ஆரியா வர்த்தத்தை எதிர்த்துத் தாக்கிய டேரையஸ், அலெக்ஸாண்டர் என்பவர்களின் வரலாறுகள் ஒருவாறு கூறப்பட்டிருக்கின்றன. அவர்களுக்குப் பின் ஒருவர்க்குப் பின் ஒருவராய்த் தோன்றிய பல இனத்

தோர்களின் சரித்திரமும் விளக்கப்பட்டிருக்கின்றது. இறுதியில் முஸ்லிம்களின் ஆட்சியைப் பற்றியும் விவரிக்கப் பட்டிருக்கின்றது. அன்னிய நாட்டார்களினால் இவ்வாறு ஏற்பட்ட கலப்பு நாகரிகமும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பிறகு முஸ்லிம்களுக்குப்பின் கிறிஸ்தவர்கள் இக்கண்டத்தை யடைந்த விருத்தாந்தத்தை எடுத்துக்கொள்ளுமுன் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் மேனாட்டில் ஏற்பட்டிருந்த சம்பந்தத்தை விளக்கவேண்டியது அவசியம். ஏனெனின் அச்சம்பந்தத்தினால் தான் மேனாட்டார்கள் கண்ணோக்கம் இந்நாட்டின்மேல் அதிகமாய் ஏற்படலாயிற்று.

முஸ்லிம்கள் முஹம்மது நபி அவர்களின் மார்க்கத்தைப் பின்பற்ற ஆரம்பித்தது முதல் அவர்கள் ஜனத்தொகையிலும் ஒற்றுமையிலும் யுத்தப்பயிற்சியிலும் வளர்ந்ததுமன்றி கும்பற்கூடி தங்களுடைய மதத்தைப் பிரசாரம்செய்வதற்கும் அன்னிய மதங்களைக் கொட்டுவதற்கும் வெகு ஆதாரங் கொண்டவர்களாய் அதிக பரபரப்புடன் தேனீ, வண்டு, செங்கொளவி ஆகியவைகளைப் போல் நான்கு திசைகளிலும் பறக்க ஆரம்பித்தனர். ஆதிமுதல், மதவிஷயமாய் முஸல்மான்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் ஜன்மப்பகை ஏற்படலாயிற்று. கி. பி. பதினோராவது நூற்றாண்டில் யாத்திரை ஸ்தலங்களைச் சேவிக்கும் வழக்கம் அதிகமாய்க் கொண்டிருக்குங்கால் துருஷ்க்கர்கள் கி. பி. 1099 (ஹி. 492)ல் கிறிஸ்தவர்களுக்குப் புண்ணிய பூமியாகிய எருஸலேத்தைத் தாக்கிப் பிடித்துக்கொண்டனர். அதனால் கிறிஸ்தவர்கள் முஸல்மான்களுடன் போர் புரியலாயினர். இப்போருக்குக் "குரூஸேட்" என்று பெயர். அஃதாவது கிராஸ் எனும் சிலுவையை மீட்டுவதற்கான யுத்தமாகும். இந்தக் குரூ



ஸேட் சுமார் கி. பி. 1453 வரை அடிக்கடி தோன்றியும் மறைந்தும் எரிந்தும் அவிந்தும் சில சமயங்களில் நீறுபூத்த தணலைப்போல் அடங்கியும் தங்கியிருந்ததெனலாம். அந்த ஆண்டில் (1453) அக்காலத்தில் ஐரோப்பாவில் வியாபாரப் போக்குவரவுக்கு முக்கிய ஸ்தானமாய் விளங்கிய கான்ஸ்டாண்டிநோபிள் என்கிற பட்டினம் துருஷ்கர் வசமாய் விட்டது. அந்த நகரம் அவர்கள் கையில் சிக்கிக்கொண்டது முதல் ஐரோப்பாவில் சில நூதனக் கிளர்ச்சிகள் தோன்றின.

ஐரோப்பாவுக்கும் அதற்குக் கிழக்கிலுள்ள பல நாடுகளுக்கும் வியாபாரப் போக்கு வரவு முற்கூறிய குரூஸேடு ஆரம்பித்தது முதல் பெருகிக்கொண்டு வந்தது. ஏனெனின் கீழ்நாட்டுச் சாமான்களின் சிறப்பும் வேலைத்திறமையும் உபயோகங்களும் மேனாட்டாருக்குத் தெரியலாயின. அக்காலத்தில்தான் இந்தியாவினின்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட சர்க்கரை என்பதை முதல் முதலில் அராபியர்கள் மூலமாய் ஐரோப்பியர்கள் தெரிந்துகொண்டனர். ஆங்கிலத்தில் "ஷுகர்" (Sugar) எனும் மொழியே சர்க்கரை எனும் வடமொழியின் சிதைவுற்ற உருவம் என்று சொல்லப்படலாம். நமது பாரதகண்டத்தின் பொருள்களும் கைத்தொழில் சரக்குகளும் அனேக நூற்றாண்டுகளுக்கு முன் பரவினின்றபோதிலும் இடையில் சிலகாலம் வியாபாரங்கள் மந்தமடைந்திருந்தன. ஆதலால் டாக்காமஸ்லின், காஷ்மீரத்திய கம்பள ஷால்கள், வங்காளத்திய பித்தளைச் சாமான்கள், மிளகு ஜாதிக்காய் ஏலக்காய் முதலிய அரிய வஸ்துக்களை மீண்டும் அவர்கள் கண்ணாற்கண்டனர் போலும். கீழ்நாட்டார்களின் நாகரிக மேன்மை மேனாட்டார்களுக்கு மீண்டும் விளங்கலாயிற்று. கீழ்நாட்டின் சாமான்களை

மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்கள். ஐரோப்பாவில் பிரபுக்களின் மாளிகைகளில் நம் நாட்டுப் பொருள்களே சிறப்புற்றோங்கி நின்றன.

அக்காலத்தில் கான்ஸ்டாண்டி நோபில்தான் ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் மத்திய மார்க்கமாய் நின்றது. சில (ஸார்த்த) வணிகர்கள் பரத கண்டத்தின் வடமேற்கு எல்லையைக் கடந்து ஆக்ஸஸ் நதிக்கரையை யடைந்து பின்னர் இருகிளைகளாகப் பிரிந்து கொண்டனர். ஒருகிளை கஸ்பியன் ஸமுத்திரத்தை யடைந்து வால்காநதியின் மார்க்கமாய் நிஜ்னி நாவகரோட் என்ற பெரும் வியாபாரச் சந்தையை யடைந்து வட ஐரோப்பாவிற்குள் புகுந்து விடுவது வழக்கம். மற்றொரு கிளை மேற்கு முகமாய்ச் சென்று கருங்கடலைத் தாண்டி கான்ஸடாண்டி நோபிலில் தங்கி அவ்விடமிருந்து மத்திய தரைக் கடலிலுள்ள வியாபார ஸ்தலங்களுக்குச் செல்வது வழக்கம். சில வியாபாரிகள் அராபிக்கடலில் பாரதநாட்டின் மேற்குக் கரையோரமாய்ச் சுற்றிக்கொண்டு பாரசீகவளைகுடா வழியாய் மெஸ்படாமியாவுக்குச் சென்று அவ்விடத்திலிருந்து பலஸ்தினம் அல்லது மேற்கு ஆசியாவின் துறைமுகப்பட்டிணங்களில் தம் பண்டங்களைக் கப்பல்களில் ஏற்றி ஜினோவா, வேனிஸ் முதலிய துறைமுகப் பட்டினங்களுக்கு அனுப்பி வந்தனர். மூன்றாவதான ஒரு மார்க்கத்தையும் சில வியாபாரிகள் பின்பற்றி யிருந்தனர். அது வட ஆபிரிக்காவிலுள்ள அலெக்ஸாண்டிரியா என்ற துறை முகத்தின் வழியாய் மேற் கூறப்பட்ட ஜினோவா வேனிஸ் ஆகிய பெரிய வியாபாரஸ்தலங்களுக்குப் போகும் மார்க்கமாகும்.

அந்தக்காலங்களில் கப்பல் போக்கு வரவு நடந்த போதிலும் பல இடையூறுகளினால் கடலில் போவது கஷ்டமாக இருந்தது. தரை மார்க்கமாய் வியாபாரஞ் செய்வது



தான் சௌகரியமாய் இருந்தது. நில பாகத்திலிருந்த இரண்டு மார்க்கங்களுள் கான்ஸ்டாண்டிநோபிள் வழியாய்ச் செல்வதே சீக்கிரமாய் முடிவதாய் நின்றது. அந்நகர் துருஷ்க்கர்கள் கைவசமானது முதல் கிறிஸ்தவர்களுக்குக் கீழ் நாடுகளுக்குப் போகும் சௌகரியம் குறைந்தது. ஏனெனின் ஆத்தோமன் சக்கிரவர்த்திகள் பல்வித இடுக்கண்களை உண்டாக்கினர். வியாபாரிகள் செலுத்தவேண்டிய சுங்கவரி மிதமிஞ்சி விட்டது. சுங்கவரி அதிகாரிகள் வியாபாரிகளைக் கொடூரமாய் நடத்தலாயினர். லஞ்சம் முதலிய உபத்திரவங்கள் விருத்தியாயின. திருட்டுப்பயம் அதிகமாயிற்று. போக்குவரத்துக்குப் பலவிதத்தில் தாமதமும் ஏற்படலாயிற்று. இக்காரணங்களினால் ஐரோப்பியர்கள் துருஷ்க்கர்கள் கையில் சிக்கிக்கொள்ளாமல் கீழ்நாடுகளுடன் வியாபாரத்தை மறுபடியும் செய்யவேண்டுமென்ற ஆவல் கொண்டவர்களானார்கள்.

மேலும் துருஷ்க்கர் அரசாட்சி ஆரம்பித்ததுமுதல் கிரேக்கர்களுள் பலர், முக்கியமாய்க் கல்விமான்கள், ஊரைவிட்டோடும்படி நேரிட்டது. அக்காலத்தில் கிரேக்கர்களுடைய பூகோள ஆராய்ச்சியும் சரித்திர ஆதாரங்களும் பூதபௌதிக சாஸ்திர விசேஷங்களும் தத்துவநூல்களும் அக்கல்விமான்களால் ஐரோப்பாவின் முக்கிய நகரங்களில் பிரசாரஞ் செய்யப்பட்டன. பதினைந்தாவது நூற்றாண்டில் அச்சு இயந்திரமும் கண்டு பிடிக்கப்பட்டது. அது முதல் அச்சுவாகனமேறிய நூல்கள் தோன்றலாயின. நூதனக் கல்வி யூக்கம் உண்டாயிற்று. ஞானம் விருத்தியாயிற்று. சாமானிய ஜனங்களுக்கும் வெளி நாட்டுச் சரித்திரங்களைத் தெரிந்து கொள்வதில் ஆவல் உண்டாயிற்று. அன்னிய நாட்டு விசித்திரக் கதைகள் எங்கும்

கூறப்பட்டன. "இந்தியா" "சீனா" முதலிய நாடுகளில் ஆச்சரியமான மனிதர்கள் இருந்தார்கள் என்று வதந்தி பெருகிற்று. கடல் மனிதர்கள், ராக்ஷஸர்கள், வேடிக்கையான ஜந்துக்கள், அமானுஷியமான உவர்நீர் தேவதைகள் ஆகியவர்களின் வரலாறுகள் வெளிக்கிளம்பின. தங்களுக்குத் தெரியாத பிரபஞ்சத்தில் நடக்கும் அபூர்வங்களைக் காண்பதற்கு ஆவல் கொண்டனர். ஆனால் வெகு தூரம் கடற்பிரயாணஞ் செய்வதற்கு வேண்டிய கருவிகளில்லை. அக்காலத்தில் காணப்பட்ட கப்பல்கள் வெகு சிறியவை ஆதலால் கடற்பிரயாணஞ் செய்யவேண்டிய திறமையைக் கற்பிக்க முதன் முதலில் போர்த்துகல் தேசத்தார் ஒரு கலாசாலை ஏற்படுத்தலாயினர். அந்நாட்டில் (1394 முதல் 1460 வரை) அரசுபுரிந்த ஹென்ரி என்பானுக்கு உண்டான தீவிர ஊக்கத்தினால் கப்பல் ஓட்டிகளுக்கு அரசாங்கத்தின் ஆதரவு ஏற்பட்டது. அந்நாட்டிற்குச் சமீபத்தில் தென் பாகத்திலுள்ள ஆபிரிக்காவைச் சுற்றிப் பார்த்து ஒருகடல் மார்க்கத்தைக் கண்டு கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் அவனால் செய்யப்பட்டது. புதிய மாதிரியாய்ச் சீர்திருத்தமடைந்த பெரிய கப்பல்கள் கட்டுவிக்கப்பட்டன. மாலுமிகளுக்குச் சகாயமான கருவிகளும் புதியவைகளாய்க் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளுள் திசை காட்டி என்னும் (Magnetic Compass) கருவியே முக்கியமானதெனலாம்.

ஹென்ரி இறந்த பிறகும் அவனது முயற்சி தொடர்ந்து கொண்டேயிருந்தது. கி. பி. 1486ல் டையஸ் என்கிற மாலுமி வீரன் ஆபிரிக்கா கண்டத்தின் தென்முனையை யடைந்தான். ஆனால் அதற்கு மேல் செல்ல முடியவில்லை. ஏனெனின் கடலில் புயல் காற்று அதிகமாயிற்று. அதனால் அந்த இடத்துக்குப் "புயற்காற்றுமுனை" யென்ற பெயரிட்



டனன். அதற்குப்பின் 1497ல் வாஸ்கோடிகாமா என்பான் அதைப்பின்பற்றியே பாரத மகாசமுத்திரத்தை வென்று அராபிக்கடலில் புகுந்து மலையாளப் பிரதேசத்தின் மேற்குக் கரையில் (அஃதாவது கேரளநாட்டில்) கள்ளிக்கோட்டை (Calicut) என்கிற இடத்தில் கப்பலை நிறுத்தலாயினன். மிளகு, லவங்கம், லவங்கப்பட்டை, ஜாதிக்காய், முதலிய வாசனைத்திரவியங்கள் வாஸ்கோடிகாமாவுக்கு முகமன் கூறின. ஏராளமான தென்னை கமுகு முதலிய விருக்ஷங்களைக் கொண்ட அந்த நாடு அவன் கண்களுக்கு ஆனந்தத்தைக்கொடுத்தன. ஆதலால் கள்ளிக்கோட்டைக்குத் தலைவனான ஜாமரின் என்பவனுடைய தர்பாரையடைய விருப்பமுற்றவனாய் ஜாமரீனுக்குத் தன் தூதர்களை யனுப்பினான். ஜாமரினும் பல்லக்கு ஒன்றை யனுப்பி மரியாதையுடன் அவனுக்கு வரவேற்பு அளித்தனன்.

வழியில் நடந்ததாய்ச் சொல்லப்படும் ஒரு கதையை ஈண்டுக் குறிப்பிடுவோமாக. வாஸ்கோடிகாமாவின் பல்லக்கு ஒரு மாரியம்மன் கோவிலுக்கெதிரில் சென்று கொண்டிருக்கையில் அவன்முன் சென்ற நான்கு அந்தணர்கள் கோவிலினின்றும் கொண்டுவரப்பட்ட ஜலத்தினால் அவனையும் அவனுடன் வந்தவர்களையும் பரிசுத்தமாக்கினார்கள். கோவிலிலிருந்த விக்கிரகம் யாதென அவன் விசாரித்த காலத்தில் அவர்கள் "மாரி, மாரி" என்றவுடன் மேரி, மேரி என்று நினைத்து உடனே போர்த்துகீஸார் அதை வணங்கலாயினர். அதைக்கண்ட அந்நாட்டினர் ஆனந்தம் அடைந்தனர். அவர்களை மிக்க மரியாதைகளுடன் அழைத்துக்கொண்டு போகலாயினர்.

கள்ளங்கவுடற்ற ஜாமரின் இவ்வாறு அவனுக்கு நல் [illegible] கூர்ந்தனன். இருவர்களுக்கும் [illegible] உண்டா [illegible]

யிற்று. போர்த்துகிஸ் மன்னனின் வெகுமதிகள் ஜாமரின் முன் பரப்பப்பட்டன. மேனாட்டு வியாபாரத்தினால் விளையக் கூடிய தங்கம் பொன் வெள்ளிக்குவியல்கள் அவன் கண்ணைக் கவர்ந்தன. வாஸ்கோடிகாமாவின் வாயிலால் போர்த்துகீஸ் அரசனுக்கு மாற்று மரியாதைகள் புரியப் பெற்றன. அந்த அரசனும் தனது குடிகள் மலையாளத்துடன் வியாபாரஞ் செய்வதற்கான உத்தரவுகளையும் உதவிகளையும் அளித்தான். உருசிகொண்ட பூனை எட்டி எட்டித் தாவுவது என்ன ஆச்சரியம்? போர்த்துகீஸார் கப்பல் கப்பலாய்ச் சாமான்களை இந்நாட்டினின்று ஏற்றுமதி செய்து கொள்ளலாயினர்.

ஆனால் அக்காலத்தில் ஏற்கெனவே அராபிக்கடலில் இங்கும் அங்கும் சுற்றிக்கொண்டிருந்த அராபிய வியாபாரிகள் தங்களுக்குச் சத்துருக்களாய்ப் போர்த்துகீஸார் வந்து விட்டனர் என்று கண்டு ஜாமரினுக்கும் வாஸ்கோடிகாமாவுக்கும் சண்டை மூட்டி விட்டனர். போர்த்துகீஸார் கடற் கொள்ளைக்காரர்கள் என்றும் அடிமை வியாபாரிகளென்றும் வதந்திகள் கிளம்பலாயின. மலையாள நாயர்கள் ஒன்றுகூடி விட்டனர். அடிக்கடி கலகங்கள் தோன்றின. உடனே வாஸ்கோடிகாமா கொச்சி தேசத்து மன்னனுடன் சிநேகம் பாராட்டினான். ஏனெனின் அந்த ராஜாவுக்கும் ஜாமரினுக்கும் விரோதம் என்கிற சூக்ஷமத்தைத் தெரிந்து கொண்டிருந்தனன். இதனால் அராபியர்களுடைய கப்பல்களுக்குச் சேதம் உண்டாயிற்று. அதுமுதல் போர்த்துகீஸாருக்கும் அராபியர்களுக்கும் இன்னும் இதர கடல் வியாபாரிகளுக்கும் [illegible]த்திரமத்தியில் அடிக்கடி சண்டைகள் [illegible] என்கிற இடத்தில் போர்த்து

18232

சரித்திரபோதகாசிரியர் :

## வை. சூரியநாராயண சாஸ்திரி, M. A., L. T.

அவர்களால் இயற்றப்பட்ட நூல்கள்.

---

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | நமது பரதகண்டம்— முதற்புத்தகம் (ஆரிய சூரியன்) .... .... | 1 | 14 | 0 |
| 2. | உலக சரித்திரம் .... .... | 1 | 4 | 0 |
| 3. | பிரபஞ்சதாரை அல்லது மானிடர் முன்னேற்றம் .... .... | 1 | 0 | 0 |
| 4. | தமிழ் நூற்பெருக்கம் .... .... | 0 | 4 | 0 |
| 5. | நமது பங்கஜம் அல்லது கலியுக பீமஸேனன் .... .... | 1 | 8 | 0 |

இன்னும் தேவையான புத்தகங்களும் அனுப்பப்படும்.

---

**சூ. வை. வெ. சகோதரர்கள்,**

தபாற்பெட்டி 408,

திருவல்லிக்கேணி, சென்னை

Solden & Co., Madras, S.E.